அம்மா எம் தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா எம் தெய்வம்

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
56/4, பழம் றோட், கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் திருமதி மாரிமுத்து கனகம்மா

அவர்களின் நினைவு வெளியீடு

07.05.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

அன்புள்ள அம்மாவுக்கு,
பசி என்று நான் உணரு முன்பே என்
பசி உணர்ந்து அமுதம் நீ தந்தாய்
நோயுற்று நான் வீழ்ந்த போதில், அது
உனக்கு உற்றதாய் துவண்டு நீ இறந்தாய்
வயிற்றில் சுமந்**தாய்**
உயிரை உணர்ந்**தாய்**
மனத்தால் உயர்ந்**தாய்**
மலர் போல மலர்கின்ற மனம் வேண்டும் **தாயே**!
பலர் போற்றிப் பாராட்டும் குணம் வேண்டும் **தாயே**!
வரம் தரும் அன்னையே! வணங்கினோம் உன்னையே!!!

மாதா பராசக்தி வையமெலா நீ நிறைந்தாய்
ஆதாரமுன்னை யல்லால் ஆரெமக்குப் பாரினிலே?
ஏதாயினும் வழி நீ சொல்வாய்; எமதுயிரே,
வேதாவின் தாயே மிகப் பணிந்து வாழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

எம் குலதெய்வம்
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன்

பெற்றதா லன்னை பெறுமுயி ரனைத்தும்
பேணலா லன்னை பெற்றிடுவோ
உற்றதா லன்னை விரும்பிய வனைத்து
முதவலா லன்னை யெக்கலையுஞ்
சொற்றதா லன்னை யுலகொடு வானுந்
தொழுதலா லன்னை யென்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலா லன்னை
பராபரை நாகபூஷணியால்

நயினை நாகமணிப்புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

அம்மாவின் மலர்வு

04

04

1925

அம்மாவின் உதிர்வு

07

04

2019

அமரர் மாரிமுத்து கனகம்மா
அவர்கள்

திதி நிர்ணயம்

ஆண்டு விளம்பியதில் ஆனதொரு பங்குனியில்
பூண்டு வரு பூர்வபக்கத் துதியையிலே - நீண்டபுகழ்த்
தேகம் விடுத்தாள் **கனகம்மா** நயினையுறை
நாகம்மாள் பாதமதை நாடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.

திருவாசகம்

நோய் உற்று மூத்து நான் நுந்து கன்றாய் இங்கு இருந்து
நாய் உற்ற செல்வம் நயந்து அறியாவண்ணம் எல்லாம்
தாய் உற்று வந்து என்னை ஆண்டுகொண்ட தன் கருணைத்
தேய் உற்ற செல்வற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ.

திருவிசைப்பா

விம்மி விம்மியே வெய்துயிர்த்து ஆளெனா
உம்மை யேநினைந்து ஏத்துமொன்று ஆகிலன்
செம்ம லோர்பயில் தில்லையு ளீர்எங்கள்
அம்மல் ஓதி அயர்வுறுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

நின்றுநினைந்து இருந்துகிடந்து எழுந்துதொழும் தொழும்பனேன்
ஒன்றியொரு கால்நினையாது இருந்தாலும் இருக்கவொட்டாய்
கன்றுபிரி கற்றாப்போல் கதறுவித்து வரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே.

பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்

திருச்சிற்றம்பலம்

திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குரு வாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத்தரு வாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

திருச்சிற்றம்பலம்

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவ வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமிப்பட்டர் அருளிய
அபிராமி அந்தாதி
கவிஞர் கண்ணதாசனின் விளக்கவுரையுடன்

காப்பு

தார் அமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமை மைந்தனே. – உலகு ஏழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி எப்போதும் எந்தன் சிந்தையுள்ளே–
கார் அமர் மேனிக் கணபதியே. – நிற்கக் கட்டுரையே.

பொருள் : கொன்றை மாலையும், சண்பக மாலையும் அணிந்து நிற்கும் தில்லையம்பதி நாயகனுக்கும், அவன் ஒரு பாதியாய் நிற்கும் உமைக்கும் மைந்தனே! மேகம் போன்ற கருநிற மேனியை உடைய பேரழகு விநாயகரே! ஏழுலகையும் பெற்ற சீர் பொருந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமித் தாயின் அருளையும், அழகையும் எடுத்துக்கூறும் இவ்வந்தாதி எப்பொழுதும் என் சிந்தையுள்ளே உறைந்து இருக்க அருள் புரிவாயாக.

பாடல் - 1

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம்போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின் கொடி, மென் கடிக் குங்கும தோயம்-என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி, எந்தன் விழுத் துணையே:

பொருள் : உதய சூரியனின் செம்மையான கதிரைப் போலவும், உச்சித்திலகம் என்கிற செம்மலரைப் போலவும், போற்றப்படுகின்ற மாணிக்கத்தைப் போலவும், மாதுள மொட்டைப் போலவும், ஒத்து விளங்கும் மென்மையான மலரில் வீற்றிருக்கின்ற திருமகளும் துதிக்கக்கூடிய வடிவையுடையவள் என் அபிராமியாகும். அவள் கொடி மின்னலைப் போன்றும், மணம் மிகு குங்குமக் குழம்பு போன்றும் சிவந்த மேனியுடையவள். இனி அவளே எனக்குச் சிறந்த துணையாவாள்.

பாடல் - 2:

துணையும், தொழும் தெய்வமும் பெற்ற தாயும், சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும்-பனி மலர்ப்பூங்
கணையும், கருப்புச் சிலையும், மென் பாசாங்குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி-ஆவது அறிந்தனமே.

பொருள் : அபிராமி அன்னையை நான் அறிந்து கொண்டேன். அவளே எனக்குத் துணையாகவும், தொழுகின்ற தெய்வமாகவும், பெற்ற தாயாகவும் விளங்குகின்றாள். வேதங்களில் தொழிலாகவும், அவற்றின் கிளைகளாகவும், வேராகவும் நிலைபெற்று இருக்கின்றாள். அவள் கையிலே குளிர்ந்த மலர் அம்பும், கரும்பு வில்லும், மெல்லிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமும், அங்குசமும் கொண்டு விளங்குகின்றாள். அந்தத் திரிபுர சுந்தரியே எனக்குத் துணை.

பாடல் - 3:

அறிந்தேன், எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், நினது திருவடிக்கே,–திருவே.– வெருவிப்
பிறிந்தேன், நின் அன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சால்,
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.

பொருள் : அருட்செல்வத்தை அன்பர்களுக்கு வழங்கும் அபிராமியே! நின் பெருமையை உணர்த்தும் அடியார்களின் கூட்டுறவை நான் நாடியதில்லை. மனத்தாலும் அவர்களை எண்ணாத காரணத்தால் தீவினை மிக்க என் நெஞ்சானது நரகத்தில் வீழ்ந்து மனிதரையே நாடிக் கொண்டிருந்தது. இப்பொழுது நான் அறிந்து கொண்டேன். ஆதலினால் அத்தீயவழி மாக்களை விட்டுப் பிரிந்து வந்து விட்டேன். எவரும் அறியாத வேதப் பொருளை தெரிந்து கொண்டு உன் திருவடியிலேயே இரண்டறக் கலந்து விட்டேன். இனி நீயே எனக்குத் துணையாவாய்.

பாடல் - 4:

மனிதரும், தேவரும், மாயா முனிவரும், வந்து, சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே.கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும்,பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே.

பொருள் : மனிதர், தேவர், பெரும் தவமுனிவர் முதலியோர் தலை வைத்து வணங்கும் அழகிய சிவந்த பாதங்களுடைய கோமளவல்லியே! தன்னுடைய நீண்ட சடாமுடியில் கொன்றையும், குளிர்ச்சி தரும் இளம் சந்திரனையும், அரவையும், கங்கையையும் கொண்டு விளங்குகின்ற புனிதரான சிவபெருமானும் நீயும் இடையறாது என் மனத்திலே ஆட்சியருள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 5 :

பொருந்திய முப்புரை, செப்பு உரைசெய்யும் புணர் முலையாள்,
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி, வார் சடையோன்
அருந்திய நஞ்சு அமுது ஆக்கிய அம்பிகை, அம்புயமேல்
திருந்திய சுந்தரி, அந்தரி–பாதம் என் சென்னியதே.

பொருள் : அபிராமி அன்னையே! உயிர்களிடத்திலே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூவகை நிலைகளிலும், நிறைந்து இருப்பவளே! மாணிக்க பூண் அணிந்த நெருக்கமான, அடர்ந்த தனங்களின் சுமையால் வருந்துகின்ற வஞ்சிக் கொடி போன்ற இடையை உடையவளே! மனோன்மணியானவளே! (அன்பர்களை ஞான நிலைக்கு கொண்டு செல்கின்றவள்) நீண்ட சடையை உடைய சிவபெருமான் அன்றொரு நாள் அருந்திய விஷத்தை அமுதமாக்கிய அழகிய தேவி! நீ வீற்றிருக்கும் தாமரையைக் காட்டிலும் மென்மையான நின் திருவடிகளையே, என் தலைமேல் கொண்டேன்.

பாடல் - 6

சென்னியது, உன் பொன் திருவடித் தாமரை. சிந்தையுள்ளே
மன்னியது, உன் திரு மந்திரம்,– சிந்துர வண்ணப் பெண்ணே.–
முன்னியநின் அடியாருடன் கூடி, முறை முறையே
பன்னியது, என்றும் உந்தன் பரமாகம பத்ததியே.

பொருள் : செம்மையான திருமேனியுடைய அபிராமித் தாயே! என்றும் என் தலைமேல் இருக்கக்கூடியது, நின் அழகிய திருவடியே! என்றும் என் சிந்தையுள்ளே நிலை பெற்று இருக்கக் கூடியது, நின் திருமந்திரமே! செந்தூர நிறமுடைய அழகிய தேவி, நான் இனி என்றும் கலந்திருப்பது நின்னையே மறவாது தொழும் அடியார்களையே! நான் தினந்தோறும் பாராயணம் செய்வது, உன்னுடைய மேலான ஆகம நெறியையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 7 :

ததியுறு மத்தின் சுழலும் என் ஆவி, தளர்வு இலது ஓர்
கதியுறுவண்ணம் கருது கண்டாய்-கமலாலயனும்,
மதியுறுவேணி மகிழ்நனும், மாலும், வணங்கி, என்றும்
துதியுறு சேவடியாய், சிந்துரானன சுந்தரியே.

பொருள் : தாமரை மலரில் உதித்தவனும், கலைமகளின் கொழுநனும் ஆகிய பிரம்மனும், திருமாலும் வணங்கிப் போற்றுகின்ற சிவந்த பாதங்களையுடைய செந்தூரத் திலகம் கொண்டு விளங்கும் பேரழகானவளே! தயிரைக் கடையும் மத்துப் போன்று உலகில் பிறப்பு இறப்பு என்று சுழன்று வருந்தாமல் என் உயிர் நல்லதொரு மோட்ச கதியையடைய அருள் புரிவாயாக!

பாடல் - 8 :

சுந்தரி எந்தை துணைவி, என் பாசத்தொடரை எல்லாம்
வந்து அரி சிந்துர வண்ணத்தினாள், மகிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கம் தரி கைத்தலத்தாள்-மலர்த்தாள் என் கருத்தனவே

பொருள் : என் அபிராமி அன்னையே பேரழகானவள். அவள் என் தந்தை சிவபெருமானின் துணைவி. என்னுடைய அகம், புறமாகிய அனைத்து பந்த பாசங்களையும் போக்கக் கூடியவள். செந்நிறத் திருமேனியாள். அன்றொருநாள் மகிஷாசுரனின் தலை மேல் நின்று, அவனை வதம் செய்தவள் (அகந்தையை அழித்தவள்). நீல நிறமுடைய நீலி என்னும் கன்னியானவள். தன்னுடைய கையில் பிரம்ம கபாலத்தைக் கொண்டிருப்பவள். அவளுடைய மலர்த்தாளையே என்றும் என் கருத்தில் கொண்டுள்ளேன்.

பாடல் - 9 :

கருத்தன எந்தைதன் கண்ணன,வண்ணக் கனகவெற்பின்
பெருத்தன, பால் அழும் பிள்ளைக்கு நல்கின, பேர் அருள்கூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தன பாரமும், ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்,
முருத்தன மூரலும், நீயும், அம்மே, வந்து என்முன் நிற்கவே.

பொருள் : அபிராமித்தாயே! என் தந்தை சிவபெருமானின் கருத்திலும், கண்ணிலும் நின்று விளங்கக் கூடியது, பொன் மலையென மதர்த்து நிற்கும் நின் திருமுலையே ஆகும். அம்முலையே நீ உயிர்களிடத்தில் காட்டும் பரிவைக் காட்டுவதற்காக அமுதப் பிள்ளையாகிய ஞானசம்பந்தருக்கு பால் நல்கியது. இப்படிப்பட்ட அருள்மிக்க கனமான கொங்கையும், அதில் விளங்கக் கூடிய ஆரமும், சிவந்த கைகளில் விளங்கும் வில்லும் அம்பும், நின்னுடைய சிவந்த இதழ் நகையும் என் முன் காட்சியருள வேண்டும்.

பாடல் - 10 :

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை,
என்றும் வணங்குவது உன் மலர்த் தாள்.-எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே, அருளே, உமையே, இமயத்து
அன்றும் பிறந்தவளே, அழியா முத்தி ஆனந்தமே.

பொருள் : அறிதற்கரிய பொருளே! அருளே உருவான உமையே! அக்காலத்தில் இமயமலையில் பிறந்தவளே! என்றும் அழியாத முக்தி ஆனந்தமாக விளங்குபவளே! உணர்தற்கரிய பெருமை வாய்ந்த வேதப் பொருளில் ஒன்றிய பொருளே! நான் நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், எந்நிலையில் இருப்பினும் நின்னையே நினைத்து தியானிக்கின்றேன். நான் வணங்குவதும் நின் மலர் போன்ற பாதங்களையே யாகும்.

பாடல் - 11:

ஆனந்தமாய், என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவு உடையாள், மறை நான்கினுக்கும்
தான் அந்தமான, சரணாரவிந்தம்-தவள நிறக்
கானம் தம் ஆடரங்கு ஆம் எம்பிரான் முடிக் கண்ணியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : அபிராமித்தாய் என் ஆனந்தமாகவும், என் அறிவாகவும் விளங்குகின்றாள். என் வாழ்வில் அமுதமாக நிறைந்திருக்கின்றாள். அவள் ஆகாயத்தில் தொடங்கி மண், நீர், நெருப்பு, காற்று என்ற ஐம்பெரும் வடிவுடையவள். வேதம் நான்கினுக்கும் தானே தொடக்கமாகவும், முடிவாகவும் இருப்பவள். இப்படிப்பட்ட தாயின் திருவடித் தாமரைகள், திருவெண் காட்டில் திருநடனம் புரியும் எம்பிரான் ஈசன் முடிமேல் தலைமாலையாகத் திகழ்வன.

பாடல் - 12:

கண்ணியது உன் புகழ், கற்பது உன் நாமம், கசிந்து பக்தி
பண்ணியது உன் இரு பாதாம்புயத்தில், பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து-நான் முன்செய்த
புண்ணியம் ஏது? என் அம்மே. புவி ஏழையும் பூத்தவளே.

பொருள் : என் அம்மையே! அபிராமித்தாயே! ஏழ் உலகையும் பெற்றவளே! நான் எப்பொழுதும் ஊனுருக நினைவது உன்புகழே! நான் கற்பதோ உன் நாமம். என் மனம் கசிந்து பக்தி செய்வதோ உன் திருவடித் தாமரை. நான் இரவென்றும், பகலென்றும் பாராமல் சென்று சேர்ந்திருப்பது உன் அடியார் கூட்டம். இவைகளுக்கெல்லாம் தாயே! நான் செய்த புண்ணியம்தான் என்ன!

பாடல் - 13 :

பூத்தவளே, புவனம் பதினான்கையும். பூத்தவண்ணம்
காத்தவளே. பின் கரந்தவளே. கறைக்கண்டனுக்கு
மூத்தவளே. என்றும்மூவா முகுந்தற்கு இளையவளே.
மாத்தவளே. உன்னை அன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே?

பொருள் : உலகம் பதினான்கையும் பெற்றவளே! எப்படிப் பெற்றாயோ, அப்படியே உலகத்தைக் காப்பவளே! பின்பு ஏதோ ஒரு காரணம் கருதி, உலகத்தை உன்னில் அடக்கிக் கொண்டவளே! கறைக் கண்டனுக்கு (ஆலகால விஷத்தை உண்டதால் கறை எனப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவளே! (ஆதி சக்தியிலிருந்தே சிவன், பிரம்மா, விஷ்ணு முதலானோர் தோன்றினார்கள் என்பது வரலாறு) என்றும் சீர் இளமை பொருந்திய திருமாலுக்குத் தங்கையே! அருந்தவத்தின் தலைவியே! அபிராமி அன்னையே! உன்னையன்றி மற்றொரு தெய்வத்தை வணங்கேன்.

பாடல் - 14 :

வந்திப்பவர் உன்னை, வானவர் தானவர் ஆனவர்கள்,
சிந்திப்பவர், நல்திசைமுகர் நாரணர், சிந்தையுள்ளே
பந்திப்பவர், அழியாப் பரமானந்தர், பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி. நின் தண்ணளியே:

பொருள் : ஏ அபிராமி அன்னையே! உன்னை வணங்குபவர்கள் தேவர்கள், அசுரர்கள், மற்றும் உன்னை விரும்பிப் பல காலமும் தொழும் அடியார்கள்! நான்கு முகங்களையுடைய பிரம்மனும் விஷ்ணுவுமே உன்னைச் சிந்திப்பவர்கள்! நின்னை மனத்திற்கு கட்டுப்படுத்தியவர் என்றும் அழியாத பரமானந்த நாதனாகிய சிவபெருமானே! இவர்களைக் காட்டிலும் உலகத்தில் நின்னைத் தரிசனம் செய்வார்க்கே நீ எளிதில் அருள் புரிகின்றாய். என் தாயே! உன் கருணைதான் என்னே! வியத்தற்குரிய தன்மையது!

பாடல் - 15 :

தண்ணளிக்கு என்று, முன்னே பல கோடி தவங்கள் செய்வார்,
மண் அளிக்கும் செல்வமோ பெறுவார்? மதி வானவர் தம்
விண் அளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடும், அன்றோ?-
பண் அளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

பொருள் : அன்னையே! அபிராமித் தாயே! இசையை எழுப்பக்கூடிய அழகிய இன்சொல் கூறும் எம் பசுங்கிளியே! நின் திருவருள் நாடிப் பலகோடி தவங்களைச் செய்தவர்கள் இவ்வுலகத்தில் கிடைக்கக் கூடிய செல்வங்களை மட்டுமா பெறுவர்? சிறந்த தேவேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி செய்யக்கூடிய விண்ணுலக போகத்தையும் பெறுவர். மற்றும், அழியாத முக்திப் பேற்றையும் அடைவார்கள் அல்லவா!

பாடல் - 16 :

கிளியே, கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்
ஒளியே, ஒளிரும் ஒளிக்கு இடமே, எண்ணில் ஒன்றும் இல்லா
வெளியே, வெளி முதல் பூதங்கள் ஆகி விரிந்த அம்மே.-
அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே.

பொருள் : கிளி போன்றவளே! தாயே! உன்னை நினைந்து வழிபடும் அடியார் மனத்தினிலே சுடர் விட்டுப் பிரகாசிக்கும் ஒளியே! அவ்வாறு ஒளிரும் ஒளிக்கு நிலையாக இருப்பவளே! ஒன்றுமே இல்லாத அண்டமாகவும், அவ்வண்டத்தினின்று ஐம்பெரும் பூதங்களாகவும் விரிந்து நின்ற தாயே! எளியேனாகிய என் சிற்றறிவுக்கு நீ எட்டுமாறு நின்றதும் அதிசயமாகும்!

பாடல் - 17:

அதிசயம் ஆன வடிவு உடையாள், அரவிந்தம் எல்லாம்
துதி சய ஆனன சுந்தரவல்லி, துணை இரதி
பதி சயமானது அபசயம் ஆக, முன் பார்த்தவர்தம்
மதி சயம் ஆக அன்றோ, வாம பாகத்தை வவ்வியதே?

பொருள் : அபிராமி அன்னை அதிசயமான அழகுடையவள்! அவள் தாமரை போன்ற மலர்களெல்லாம் துதிக்கக் கூடிய வெற்றி பொருந்திய அழகிய முகத்தையுடையவள் கொடி போன்றவள் அவள் கணவன் முன்பு ஒருநாள் மன்மதனின் வெற்றிகளையெல்லாம் தோல்வியாக நெற்றிக் கண்ணைத் திறந்து பார்த்தார். அப்படிப்பட்டவரின் மனத்தையும் குழையச் செய்து, அவருடைய இடப் பாகத்தைக் கவர்ந்து கொண்டாள், வெற்றியுடைய தேவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 18:

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து-
வெவ்விய காலன் என்மேல் வரும்போது-வெளி நிற்கவே.

பொருள் : அபிராமித் தாயே! என் அகப்பற்று, புறப்பற்று ஆகிய பாசங்களை அகற்றி, என்னை ஆட்கொண்டு அருளிய நின் பொற்பாதங்களோடு, எந்தை எம்பிரானோடு இரண்டறக் கலந்திருக்கும் அர்த்த நாரீஸ்வரர் அழகும், தனித்தனி நின்று காட்சி தரும் திருமணக்கோலமும், கொடிய காலன் என்மேல் எதிர்த்து வரும் காலங்களில் காட்சியருள வேண்டும்.

பாடல் - 19 :

வெளிநின்ற நின்திருமேனியைப் பார்த்து, என் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டது, இல்லை, கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது, என்ன திருவுளமோ?-
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

பொருள் : ஒளி பொருந்திய ஒன்பது கோணங்களில் (நவசக்தி) உறைகின்ற தாயே! நின் திருமணக் காட்சி தருவதைக் கண்ட என் கண்களும், நெஞ்சும் கொண்ட மகிழ்ச்சி வெள்ளத்திற்கு இதுவரை ஒரு கரை கண்டதில்லை. ஆயினும் தெளிந்த ஞானம் இருப்பதை உணர்கிறேன். இது உன்னுடைய திருவருள் பயனேயாகும்.

பாடல் - 20 :

உறைகின்ற நின் திருக்கோயில்-நின் கேள்வர் ஒரு பக்கமோ,
அறைகின்ற நான் மறையின் அடியோ முடியோ, அமுதம்
நிறைகின்ற வெண் திங்களோ, கஞ்சமோ, எந்தன் நெஞ்சகமோ,
மறைகின்ற வாரிதியோ?- பூரணாசல மங்கலையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : என்றும் பூரணமாய் விளங்குகின்ற அபிராமி அன்னையே! நீ வீற்றிருக்கும் திருக்கோயில் நின் கொழுநராகிய சிவபெருமானின் ஒரு பாகமோ? அன்றி, ஓதப்படுகின்ற நான்கு வேதங்களின் ஆதியோ? அந்தமோ? அன்றியும், அமிர்தம் போன்ற குளிர்ந்த முழுச்சந்திரனேயன்றி வெண் தாமரையோ? இல்லை, என்னுடைய நெஞ்சம்தானேயோ அல்லது செல்வமெல்லாம் மறைந்திருகக் கூடிய பாற் கடலோ? தாயே! நீ எங்கும் நிறைந்திருப்பதால் எதில் என்று தோன்றவில்லையே!

பாடல் - 21:

மங்கலை, செங்கலசம் முலையாள், மலையாள், வருணச்
சங்கு அலை செங்கைச் சகல கலாமயில் தாவு கங்கை
பொங்கு அலை தங்கும் புரிசடையோன் புடையாள், உடையாள்
பிங்கலை, நீலி, செய்யாள், வெளியாள், பசும் பெண்கொடியே.

பொருள் : அம்மா அபிராமி! என்றும் பசுமையான பெண் கொடியாக விளங்குபவளே! என்றும் சுமங்கலியே! செங்கலசம் போன்ற தனங்களையுடையவளே! உயர்ந்த மலையிலே உதித்தவளே! வெண்மையான சங்கு வளையல்களை அணியும் செம்மையான கரங்களையுடையவளே! சகல கலைகளும் உணர்ந்த மயில் போன்றவளே! பாய்கின்ற கங்கையை, நுரை கடலைத் தன் முடியிலே தரித்த சிவபெருமானின் ஒரு பாதி ஆனவளே! என்றும் பக்தர்களையுடையவளே! பொன் நிறமுடையவளே! கருநிறமுடைய நீலியே! சிவந்த மேனியாகவும் விளங்குகின்றவளே!

பாடல் - 22:

கொடியே, இளவஞ்சிக் கொம்பே, எனக்கு வம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே, பனி மால் இமயப்
பிடியே, பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே.
அடியேன் இறந்து இங்கு இனிப் பிறவாமல் வந்து ஆண்டு கொள்ளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : கொடியானவளே! இளமையான வஞ்சிப் பொற் கொம்பே! தகுதியற்ற எனக்குத் தானே முன் வந்து அருளளித்த கனியே! மணம் பரப்பும் வேத முதற் பொருளே! பனி உருகும் இமயத்தில் தோன்றிய பெண் யானை போன்றவளே! பிரம்மன் முதலாகிய தேவர்களைப் பெற்றெடுத்த தாயே! அடியேன் இப்பிறவியில் இறந்தபின், மீண்டும் பிறவாமல் தடுத்தாட் கொள்ள வேண்டும்.

பாடல் - 23:

கொள்ளேன், மனத்தில் நின் கோலம் அல்லாது, அன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன், பரசமயம் விரும்பேன், வியன் மூவுலகுக்கு
உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே, உள்ளத்தே விளைந்த
கள்ளே, களிக்குங்களியே, அளிய என் கண்மணியே.

பொருள் : அபிராமித் தாயே! நின்னுடைய கோலமில்லாத வேறொரு தெய்வத்தை மனத்தில் கொள்ளேன். நின்னுடைய அடியார்கள் கூட்டத்தைப் பகைத்துக் கொள்ள மாட்டேன். உன்னையன்றி பிற சமயங்களை விரும்ப மாட்டேன். மூன்றுலகங்கட்கு (மண், விண், பாதாளம்) உள்ளேயும், யாவற்றினுக்கும் வெளியேயும் நிறைந்திருப்பவளே! எம்முடைய உள்ளத்திலே ஆனந்தக் களிப்பை உண்டாக்கும் கள்ளே! ஆனந்தத்திற்கு ஆனந்தமானவளே! எளியேனாகிய எனக்கும் அருள் பாலித்த என் கண்மணி போன்றவளே!

பாடல் - 24 :

மணியே, மணியின் ஒளியே, ஒளிரும் மணி புனைந்த
அணியே, அணியும் அணிக்கு அழகே, அணுகாதவர்க்குப்
பிணியே, பிணிக்கு மருந்தே, அமரர் பெரு விருந்தே.-
பணியேன், ஒருவரை நின் பத்ம பாதம் பணிந்தபின்னே.

பொருள் : அபிராமித்தாயே! மணியாக விளங்குபவளே! அம் மணியில் உண்டாகும் ஒளியாகவும் விளங்குபவளே! ஒளி பொருந்திய நவமணிகளால் இழைக்கப்பட்ட அணியாகவும், அந்த அணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாகவும் திகழ்பவளே! நின்னை அணுகாதவர்க்குப் பிணியென நிற்பவளே! நின்னை அண்டிவரும் பாபாத்துமாக்களின் பிணிக்கு மருந்தாகவும் நிற்பவளே! தேவர்களுக்கு பெரும் விருந்தாய்த் தோன்றும் அன்னையே! நின் அழகிய தாமரை போலுள்ள சேவடியைப் பணிந்த பின்னே, வேறொரு தெய்வத்தை வணங்க மனத்தாலும் நினையேன்.

பாடல் - 25 :

பின்னே திரிந்து, உன் அடியாரைப் பேணி, பிறப்பு அறுக்க,
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன்,- முதல் மூவருக்கும்
அன்னே, உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே,-
என்னே?-இனி உன்னை யான் மறவாமல் நின்று ஏத்துவனே.

பொருள் : அம்மையே! மும்மூர்த்திகளின் தாயாக விளங்குபவளே! மூவுலகத்திற்கும் கிடைத்த அருமருந்தே! இனி நான் பிறவாமல் இருக்க, முன்னதாகவே தவங்கள் பல முயன்று செய்து கொண்டேன். அதற்காகவே நின் அடியார்கள் பின் திரிந்து அவர்களுக்குப் பணி செய்து வருகின்றேன். அம்மா! அபிராமித்தாயே! நான் முன் செய்த தவப் பயனே, இப்பிறவியில் உன்னை மறவாமல் நல்வழி நின்று வணங்குகின்றேன். இன்னும் வணங்கிக் கொண்டேயிருப்பேன்.

பாடல் - 26 :

ஏத்தும் அடியவர், ஈரேழ் உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம்,- கமழ்பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே,- மணம் நாறும் நின் தாளிணைக்கு என்
நாத் தங்கு புன்மொழி ஏறியவாறு, நகையுடைத்தே.

பொருள் : பதினான்கு உலகினையும் முறையாகப் படைத்தும், காத்தும், அழித்தும் தொழில் புரியும் தேவாதி தேவர்கள் முறையே பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகளாவார்கள். இம் மும்மூர்த்திகளும் போற்றி வணங்கக்கூடிய அன்னை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமியேயாகும். இத்துணை பெருமையும், மணம் வீசுகின்ற கடம்ப மாலையையும் அணிந்தவளாகிய ஆரணங்கே! மணம் வீசுகின்ற நின் இணையடிகளில், எளியேனாகிய என்னுடைய நாவினின்று தோன்றிய வார்த்தைகளைச் (அபிராமி அந்தாதி) சாத்துகின்றேன். அவ்வாறு நின் திருவடியில் என் பாடல் ஏற்றம் பெற்றிருப்பது, எனக்கே நகைப்பை விளைவிக்கின்றது.

பாடல் - 27 :

உடைத்தனை வஞ்சப் பிறவியை, உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை, பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை, நெஞ்சத்து அழுக்கையெல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை,- சுந்தரி - நின் அருள் ஏதென்று சொல்லுவதே.

பொருள் : அபிராமி அன்னையே! நான் அகத்தே கொண்டிருந்த ஆணவம், கன்மம், மாயை என்கிற பொய் ஜாலங்களை உடைத்தெறிந்தாய். பக்திக்கனல் வீசும் அன்பான உள்ளத்தினை அளித்தாய். இந்த யுகத்தில் நின் தாமரை போலும் சேவடிக்குப் பணி செய்ய எனக்கு அருள் புரிந்தாய். என் நெஞ்சத்திலேயிருந்த அழுக்கையெல்லாம் துப்புரவாக உன்னுடைய அருள் வெள்ளத்தால் துடைத்தாய். பேரழகு வடிவே! நின் அருளை எப்படி நான் வாய்விட்டு உரைப்பேன்!

பாடல் - 28 :

சொல்லும் பொருளும் என, நடம் ஆடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே. நின் புதுமலர்த் தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும், சிவலோகமும் சித்திக்குமே.

பொருள் : தூய்மையான சொல்லோடு இணைந்த பொருள் போல ஆனந்தக் கூத்தாடும் துணைவருடன் இணைந்து நிற்கும் மணம் வீசுகின்ற அழகிய பூங்கொடி போன்றவளே! அன்றலர்ந்த பரிமள மலரைப் போல உள்ள உன் திருவடிகளை இரவென்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலென்றும் பாரமால் தொழுகின்ற அடியார் கூட்டத்திற்கே என்றும் அழியாத அரச போகமும், நல்ல மோட்சத்திற்கான தவநெறியும், சிவபதமும் வாய்க்கும்.

பாடல் - 29 :

சித்தியும் சித்தி தரும் தெய்வம் ஆகித் திகழும் பரா
சக்தியும், சக்தி தழைக்கும் சிவமும், தவம் முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும், வித்து ஆகி முளைத்து எழுந்த
புத்தியும், புத்தியினுள்ளே புரக்கும் புரத்தை அன்றே.

பொருள் : அபிராமித் தேவி! நீயே சகலத்திற்கும் சித்தியாவாய். அச்சித்தியைத் தரும் தெய்வமான ஆதி சக்தியாகவும் திகழ்கின்றாய். பராசக்தியாகிய நீ கிளைத்தெழக் காரணமான பரமசிவமும், அச்சிவத்தைக் குறித்துத் தவம் செய்யும் முனிவர்களுக்கு முக்தியும், அம் முக்தியால் ஏற்படுகின்ற விதையும், அவ்விதையில் ஏற்பட்ட ஞானமும், ஞானத்தின் உட்பொருளும், என் நின்று, சகல பந்தங்களினின்று, காக்கக்கூடிய தெய்வம் திரிபுர சுந்தரியாகிய உன்னைத் தவிர வேறு யார் உளர்?

பாடல் - 30 :

அன்றே தடுத்து என்னை ஆண்டுகொண்டாய், கொண்டது அல்ல என்கை
நன்றே உனக்கு? இனி நான் என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும், கரையேற்றுகை நின் திருவுளமோ.-
ஒன்றே, பல உருவே, அருவே, என் உமையவளே.

பொருள் : அபிராமி அன்னையே! என் உமையவளே! நான் பாவங்களைச் செய்வதற்கு முன்பே என்னை தடுத்தாட் கொண்டவளே! நான் பாவங்களையே செய்தாலும், நடுக்கடலில் சென்று வீழ்ந்தாலும், அதனின்று காப்பது நின் கடைமையாகும். என்னை ஈடேற்ற முடியாது என்று சொன்னால் நன்றாகாது. இனி உன் திருவுளம்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கரை ஏற்ற வேண்டும் (பந்தபாசக் கடலில் இருந்து முக்திக் கரை ஏற்றுதல்). ஒன்றாகவும், பலவாகவும், விளங்குகின்ற என் உமையவளே!

பாடல் - 31 :

உமையும் உமையொருபாகனும், ஏக உருவில் வந்து இங்கு
எமையும் தமக்கு அன்பு செய்யவைத்தார், இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை, ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை,
அமையும் அமையுறு தோளியர்மேல் வைத்த ஆசையுமே.

பொருள் : அபிராமித் தேவியே! நீயும், உன்னைப் பாகமாகவுடைய எம்பிரானும், ஆண்பாதி, பெண்பாதி என்ற நிலையில் காட்சியளித்ததோடு அல்லாமல், என்னை உங்களுக்குத் தொண்டு செய்யும்படியாகவும் அருள்புரிந்தீர்கள். ஆகவே எனக்கன்றி இனிச் சிந்திப்பதற்கு ஒரு மதமும் இல்லை. என்னை ஈன்றெடுக்க ஒரு தாயும் இல்லை. வேய் (மூங்கில்) போன்ற தோளையுடைய பெண்ணின் மேல் வைத்த ஆசையும் இல்லாமல் ஒழிந்தது.

பாடல் - 32:

ஆசைக் கடலில் அகப்பட்டு, அருளற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லற்பட இருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலிய வைத்து, ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்?– ஈசர் பாகத்து நேரிழையே.

பொருள் : அபிராமித்தாயே! எந்தன் ஈசன் இடப்பாகத்தில் தானொரு பகுதியாக அமைந்தவளே! அம்மா! நான் கொடிய ஆசையென்னும் துயரக் கடலில் மூழ்கி இரக்கமற்ற எமனின் பாச வலையில் சிக்கியிருந்தேன். அத் தருணத்தில் பாவியாகிய என்னை மணம் பொருந்திய உன்னுடைய பாதத் தாமரையே வலிய வந்து என்னை ஆட்கொண்டது! தாயே! நின் அரும்பெரும் கருணையை என்னென்று உரைப்பேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 33 :

இழைக்கும் வினைவழியே அடும் காலன், எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து, அஞ்சல் என்பாய். அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே.
உழைக்கும் பொழுது, உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே

பொருள் : தாயே! அபிராமியே! நான் செய்த தீய வழிகளுக்காக என்னை நெருங்குகின்ற எமன் என்னைத் துன்புறுத்தி, வதைக்கும் பொழுது, தாயே உன்னை அழைக்க, அஞ்சேல் என ஓடிவந்து காப்பவளே! சிவ பெருமானின் சித்தத்தையெல்லாம் குழையச் செய்கின்ற சந்தனம் பூசிய குவிந்த முலைகளையுடைய இளமையான கோமளவல்லித் தாயே! மரண வேதனையில் நான் துன்புறும் போது உன்னை, "அன்னையே" என்பேன். ஓடிவந்து என்னைக் காத்தருள்வாய்!

பாடல் - 34 :

வந்தே சரணம் புகும் அடியாருக்கு, வானுலகம்
தந்தே பரிவொடு தான் போய் இருக்கும்--சதுர்முகமும்,
பைந் தேன் அலங்கல் பரு மணி ஆகமும், பாகமும், பொற்
செந் தேன் மலரும், அலர் கதிர் ஞாயிறும், திங்களுமே.

பொருள் : தாயே! அபிராமி, நீ நான்முகங்களையுடைய பிரம்மனின் படைப்புத் தொழிலில் இருக்கின்றாய்! பசுமையான தேன் கலந்த துபள மாலையையும், நவமணி மாலைகளையும் அணிந்த மார்பினனாகிய திருமாலின் மார்பில் இருக்கின்றாய்! சிவபெருமானின் இடப்பாகத்திலும், பொன் தாமரை மலரிலும், விரிந்த கதிர்களுடைய சூரியனிடத்திலும், சந்திரனிடத்தும் தங்கியிருக்கின்றாய். உன்னைச் சரணமென்று வந்தடையும் பக்தர்களைத் துயரங்களிலிருந்து நீக்கி, வானுலக வாழ்வைக் கொடுப்பவள் நீயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 35 :

திங்கட் பகவின் மணம் நாறும் சீறடி சென்னி வைக்க
எங்கட்கு ஒரு தவம் எய்தியவா, எண் இறந்த விண்ணோர்--
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ?- தரங்கக் கடலுள்
வெங் கண் பணி அணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.

பொருள் : அன்னையே! அபிராமியே! திருப்பாற்கடலிற் சிவந்த கண்களையுடை பாம்புப் படுக்கையில் வைஷ்ணவி என்னும் பெயரால் அறிதுயில் அமர்ந்தவளே! பிறைச் சந்திரனின் மணம் பொருந்திய அழகிய பாதங்களை எம்மேல் வைக்க நாங்கள் செய்த தவம்தான் என்னவோ! விண்ணுலகத் தேவர்களுக்கும் இந்தப் பாக்கியம் கிட்டுமோ!

பாடல் - 36 :

பொருளே, பொருள் முடிக்கும் போகமே, அரும் போகம் செய்யும்
மருளே, மருளில் வரும் தெருளே, என் மனத்து வஞ்சத்து
இருள் ஏதும் இன்றி ஒளி வெளி ஆகி இருக்கும் உன்தன்
அருள் ஏது.- அறிகின்றிலேன், அம்புயாதனத்து அம்பிகையே.

பொருள் : குவிந்த தனங்களையுடைய அபிராமியே! நீ பொருளாக இருக்கின்றாய் என்கிறார்கள். பிறகு அப்பொருளால் நுகரப்படும் போகமும் நீயே என்கிறார்கள். பிறகு அப்போகத்தால் ஏற்படுகின்ற மாயையாகவும் இருக்கின்றாய் என்றும், அம்மாயையில் தோன்றி விளங்கும் தெளிவாகவும் விளங்குகின்றாய் என்றும் கூறுகின்றார்கள் இவ்வாறு பல கூறுபாடுகளாகவுள்ள நீயே என் மனத்தில் அஞ்ஞான மாயை அகற்றி தூய ஞான ஒளியை ஏற்றியிருக்கின்றாய். பரவொளியாய் விளங்கும் அபிராமியே! நின் திருவருளின் மகிமையை உணர மாட்டாது மயங்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 37 :

கைக்கே அணிவது கன்னலும் பூவும், கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண் முத்துமாலை, விட அரவின்
பைக்கே அணிவது பண்மணிக் கோவையும், பட்டும், எட்டுத்
திக்கே அணியும் திரு உடையானிடம் சேர்பவளே.

பொருள் : என் அபிராமி அன்னையே! நின் அருட் கரங்களில் அணிவது இனிய கரும்பும், மலர்க் கொத்துமாகும். தாமரை மலரைப் போன்ற மேனியில் அணிந்து கொள்வது, வெண்மையான நன்முத்து மாலையாகும். கொடிய பாம்பின் படம் போல் உள்ள அல்குலைக் கொண்ட இடையில் அணிவது பலவித நவமணிகளால் செய்யப்பட்ட மேகலையும் பட்டுமேயாகும். அனைத்துச் செல்வங்களுக்கும் தலைவனாகிய எம்பெருமான் எட்டுத் திசைகளையுமே ஆடையாகக் கொண்டுள்ளான். அப்படிப்பட்ட எம்பிரானின் இடப்பாகத்தில் பொலிந்து தோன்றுகின்றாய் நீ!

பாடல் - 38 :

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்
தவளத் திரு நகையும் துணையா, எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது, துடியிடை சாய்க்கும் துணை முலையாள்--
அவளைப் பணிமின் கண்டீர், அமராவதி ஆளுகைக்கே.

பொருள் : என் அன்னை அபிராமி பவளக்கொடி போலும் சிவந்த வாயை உடையவள். குளிர்ச்சி தரும் முத்துப்பல் சிரிப்பழகி, அது மட்டுமா? எம் ஈசன் சங்கரனின் தவத்தைக் குலைத்தவள். எப்படி? உடுக்கை போலும் இடை நோகும்படியுள்ள இணைந்த முலைகளால்! அப்படிப்பட்டவளைப் பணிந்தால் தேவர் உலகமே கிடைக்கும். ஆகவே அவளைப் பணியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 39:

> **ஆளுகைக்கு, உன்தன் அடித்தாமரைகள் உண்டு, அந்தகன்பால்**
> **மீளுகைக்கு, உன்தன் விழியின் கடை உண்டு, மேல் இவற்றின்**
> **மூளுகைக்கு, என் குறை, நின் குறையே அன்று,-முப்புரங்கள்.**
> **மாளுகைக்கு, அம்பு தொடுத்த வில்லான், பங்கில் வாணுதலே.**

பொருள் : அபிராமி! நின் திருவடித் தாமரைகள் இருக்கின்றன. அவற்றிற்கு என்னை ஆளும் அருள் உண்டு. உன்னுடைய கடைக்கண் கருணையுண்டு. ஆகையால் எமனிடத்திலிருந்து எனக்கு மீட்சியுண்டு. நான் உன்னை முயன்று வணங்கினால் பயன் உண்டு. வணங்காவிடின் அது என் குறையே் உன் குறையன்று. அழகிய நெற்றியை உடையவளே! முப்புரத்தை அழிக்க வில்லையும் அம்பையும் எடுத்த சிவபெருமானின் இடப்பாகத்தில் அமர்ந்தவளே! அபிராமியே!

பாடல் - 40 :

> **வாள்-நுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்து இறைஞ்சிப்**
> **பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியை, பேதை நெஞ்சில்**
> **காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியை, காணும்--அன்பு**
> **பூணுதற்கு எண்ணிய எண்ணம் அன்றோ, முன் செய் புண்ணியமே.**

பொருள் : ஒளி பொருந்திய நெற்றியுடையவள் அபிராமி! தேவர்களும் வணங்க வேண்டும் என்ற நினைப்பை உண்டு பண்ணக்கூடியவள்! அறியாமை நிறைந்த நெஞ்சுடையார்க்கு எளிதில் புலப்படாதவள். என்றும் கன்னியானவள். இப்படிப்பட்டவளை நான் அண்டிக் கொண்டு வணங்க எண்ணினேன். இதுவே நான் முற்பிறவிகளில் செய்த புண்ணியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 41:

புண்ணியம் செய்தனமே-மனமே.- புதுப் பூங் குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடி, நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடு இருக்கப்
பண்ணி, நம் சென்னியின் மேல் பத்ம பாதம் பதித்திடவே.

பொருள் : அபிராமி, புதிதாக மலர்ந்த குவளைக் கண்களையுடையவள். அவள் கணவரோ சிவந்த திருமேனியையுடைய சிவபெருமான். அவர்களிருவரும் இங்கே கூடிவந்து அடியார்களாகிய நம்மைக் கூட்டினார்கள். அத்துடன் நம்முடைய தலைகளை அவர்களுடைய திருப்பாதங்களின் சின்னமாகச் சேர்த்துக் கொண்டார்கள். அவர்களின் அருளுக்கு நாம் புண்ணியமே செய்திருக்கிறோம்.

பாடல் - 42 :

இடங்கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி, முத்து
வடங்கொண்ட கொங்கை-மலைகொண்டு இறைவர் வலிய நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலம் கொண்ட நாயகி, நல் அரவின்
வடம் கொண்ட அல்குல் பணிமொழி--வேதப் பரிபுரையே.

பொருள் : அம்மையே! ஒளிவீசும் முத்துமாலை உன்னுடைய தனங்களில் புரள்கின்றது. உம்முடைய தனங்களோ ஒன்றுக்கொன்று இடமின்றி பருத்து மதர்த்திருக்கின்றது. இந்தக் கொங்கையாகிய மலை சிவபெருமானின் வலிமை பொருந்திய மனத்தை ஆட்டுவிக்கின்றது. அபிராமி சுந்தரியே! நல்ல பாம்பின் படம் போன்ற அல்குலை உடையவளே! குளிர்ச்சியான மொழிகளையுடையவளே! வேதச் சிலம்புகளைத் திருவடிகளில் அணிந்து கொண்டவளே! தாயே!

பாடல் - 43:

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை, பஞ்சபாணி, இன்சொல்
திரிபுர சுந்தரி, சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிபுர, வஞ்சரை அஞ்சக் குனி பொருப்புச்சிலைக் கை,
எரி புரை மேனி, இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

பொருள் : சிலம்பணிந்த அழகிய பாதங்களை உடையவளே! பாசத்தையும் அங்குசத்தையும் உடையவளே! பஞ்ச பாணங்களையும், இனிமையான சொல்லையுமுடைய திரிபுர சுந்தரியே! சிவந்த சிந்தூர மேனி உடையவளே! கொடிய மனத்தையுடைய முப்புரத்தை ஆண்ட அசுரரை அஞ்சி நடுங்கும்படி முப்புரத்தை அழித்த சிவபெருமானின் இடப்பாகத்தில் அமர்ந்தவளே!

பாடல் - 44:

தவளே இவள், எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
அவளே, அவர்தமக்கு அன்னையும் ஆயினள், ஆகையினால்,
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும் ஆம்,
துவளேன், இனி ஒரு தெய்வம் உண்டாக மெய்த் தொண்டு செய்தே.

பொருள் : எங்கள் இறைவனாகிய சங்கரனின் இல்லத் துணைவியே! அவருக்கே அன்னையாகவும் (பராசக்தி ஈன்ற பரமசிவம்) ஆனவளே! ஆகையால் நீயே யாவர்க்கும் மேலானவள்! ஆகவே, உனக்கே இனி உண்மையான தொண்டு செய்வேன். ஆதலால், இனி நான் துன்பங்களால் துவள மாட்டேன். தாயே!

பாடல் - 45 :

தொண்டு செய்யாதுநின் பாதம் தொழாது, துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ, இலரோ? அப் பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ, அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே, பின் வெறுக்கை அன்றே.

பொருள் : அன்னையே! உனக்கு பணிவிடை செய்யாமல், உன் பாதங்களை வணங்காமல், தன் இச்சைப்படியே கடமையைச் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானிகளும் உளர். அவர்களின்படி நான் நடந்தால் நீ வெறுப்பாயோ, அல்லது பொறுத்து அருள் செய்வாயோ, எனக்குத் தெரியாது! ஆயினும், நான் தவறே செய்தாலும், என்னை வெறுக்காமல் பொறுத்துக் கொண்டு நீ அருள் பண்ணுவதே நீதியாகும்.

பாடல் - 46 :

வெறுக்கும் தகைமைகள் செய்யினும், தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியது அன்றே.-புது நஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே.-
மறுக்கும் தகைமைகள் செய்யினும், யானுன்னை வாழ்த்துவனே.

பொருள் : ஏ அபிராமியே! விஷத்தை உண்டவனும், அதனால் கருத்திருக்கும் கழுத்தை உடையவனுமாகிய சிவபெருமானின் இடப்பாகத்தில் அமர்ந்தவளே! சிறியோர்கள் செய்யக்கூடாத செயல்களைச் செய்து விடுவர். அறிவிற் சிறந்த ஞானிகள் அதைப் பொறுத்து அருளியதும் உண்டு. இது ஒன்றும் புதுமையல்ல. பொன் போன்றவளே! நான் தகாத வழியில் சென்றாலும், அது உனக்கே வெறுப்பாகயிருந்தாலும் மீண்டும் மீண்டும் உன்னையே சரணடைவேன். அத்துடன் மேலும் வாழ்த்தி வழிபடுவேன்.

பாடல் 47 :

வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன், மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று, விள்ளும்படி அன்று, வேலை நிலம்
ஏழும் பரு வரை எட்டும், எட்டாமல் இரவு பகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

பொருள் : அன்னையே!அபிராமித் தாயே! நீ கடல்களுக்கும் ஏழ் உலகங்களுக்கும், உயர்ந்த மலைகள் எட்டினிற்கும் அரிதில் எட்டாதவள். மேலாக உள்ள இரவையும், பகலையும் செய்யும் சந்திர சூரியர்க்கு இடையே நின்று, சுடர்விட்டுப் பிராகாசிக்கின்றவள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 48 :

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார், பின்னும் எய்துவரோ-
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

பொருள் : ஏ அபிராமியே! பச்சைப் பரிமளக் கொடி நீயேயாகும். ஒளிரும் இளம் பிறையை, குன்றை ஒத்த சடாமுடியில் அணிந்திருக்கும் சிவபெருமானை இணைந்தவளே! உன்னையே நெஞ்சில் நினைந்து வழிபடும் யோகிகளூாம், இமையாது கடுந்தவம் புரியும் ஞானிகளூாம் மீண்டும் பிறப்பார்களோ? மாட்டார்கள்! ஏனென்றால் தோலும், குடலும், இரத்தமும், இறைச்சியும் கொண்ட இந்த மானிடப் பிறவியை விரும்பார், ஆதலின்!

பாடல் - 49:

குரம்பை அடுத்து குடிபுக்க ஆவி, வெங் கூற்றுக்கு இட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது, வளைக்கை அமைத்து,
அரம்பை அடுத்து அரிவையர் சூழ வந்து, அஞ்சல் என்பாய்--
நரம்பை அடுத்து இசை வடிவாய் நின்ற நாயகியே.

பொருள் : நரம்புக் கருவிகளைக் கொண்ட, இசையே வடிவாக உள்ள அபிராமியே! அடியேனாகிய என்னுடைய உடலையும், அதிலே இணைந்த உயிரையும் கொடுமையான எமன் வந்து பறிக்க, நானும் மரணத்திற்கு அஞ்சி வருந்துவேன். அப்பொழுது அரம்பையரும், தேவமகளிரும் சூழ என்னிடத்து வந்து அஞ்சேல் என்பாய்! எனக்கு அருள் புரிவாய்!

பாடல் - 50 :

நாயகி, நான்முகி, நாராயணி, கை நளின பஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, சாதி நச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் அகி மாலினி, வாராகி, சூலினி, மாதங்கி என்று
ஆய கியாதியுடையாள் சரணம்–அரண் நமக்கே.

பொருள் : ஏ அபிராமியே! நீயே உலக நாயகி. பிரம்ம சக்தியும், விஷ்ணு சக்தியும் நீ. நீயே ஒய்யாரமாக ஐவகை மலர் அம்புகளைக் கையிலேந்தியவள். சம்புசக்தி, சங்கரி, எழிலுடையாள், நாகபாணி, மாலினி, உலகளிக்கும் வராகி, சூலி, மாதங்க முனிமகள் என்றெல்லாம் பல வடிவானவள்! நீயே ஆதியானவள். ஆகவே, உன்னுடைய திருவடியையே வணங்கினோம். அதுவே எமக்குப் பாதுகாவல்.

பாடல் - 51:

அரணம் பொருள் என்று, அருள் ஒன்று இலாத அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே,
சரணம் சரணம் என நின்ற நாயகி தன் அடியார்,
மரணம் பிறவி இரண்டும் எய்தார், இந்த வையகத்தே.

பொருள் : திரிபுரத்தை நிலையென்று நினைத்த, தன்மையற்ற அசுரர்களை அழித்த சிவபெருமானும், திருமாலும் வணங்கக்கூடிய அபிராமியே! அன்னையே! உன்னையே சரணம் சரணம் என்று அண்டிய அடியார்களின் மரண பயத்தை ஒழிப்பாய்! அது மட்டுமல்ல் அவர்களைப் பொய்மையான இந்த உலக வாழ்வினின்றும் விடுவிப்பாய் (பிறப்பறுப்பாய்), பெருநிலை தருவாய்!

பாடல் - 52:

வையம், துரகம், மதகரி, மா மகுடம், சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம்,--பிறை முடித்த
ஐயன் திருமனையாள் அடித் தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

பொருள் : ஏ, அபிராமி! உன்னிடம் அன்பு கொண்டு தவம் செய்யும் ஞானிகள் உன் திருவடித் தாமரைகளையே வணங்குகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திருவடிகளைக் கண்டுகொள்ள அடையாளம் எதுவென்றால், பிறையணிந்த சிவபெருமானின் துணைவியே! கேள்: வையம், தேர், குதிரை, யானை, உயர்ந்த மணிமுடிகள், பல்லக்குகள், கொட்டும் பொன், உயர்ந்த முத்து மாலைகள் - இவையே நின் திருவடிச் சின்னம்!

பாடல் - 53 :

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்ய பட்டும்
பென்னம் பெரிய முலையும், முத்தாரமும், பிச்சி மொய்த்த
கன்னங்கரிய குழலும், கண் மூன்றும், கருத்தில் வைத்துத்
தன்னந்தனி இருப்பார்க்கு, இது போலும் தவம் இல்லையே.

பொருள் : ஏ, அபிராமி! மென்மையான இடையில், செம்மையான பட்டணிந்தவளே! அழகிய பெரிய முலைகளில் முத்தாரம் அணிந்தவளே! வண்டுகள் மொய்க்கும் பிச்சிப்பூவைக் கன்னங்கரிய குழலில் சூடியவளே! ஆகிய மூன்று திருக்கண்களை உடையவளே! உன்னுடைய இந்த அழகையெல்லாம் கருத்திலே கொண்டு தியானித்திருக்கும் அடியார்களுக்கு இதைவிடச் சிறந்த தவம் ஏதுமில்லை.

பாடல் - 54 :

இல்லாமை சொல்லி, ஒருவர் தம்பால் சென்று, இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடு தவம்
கல்லாமை கற்ற கயவர் தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

பொருள் : ஏ, வறிஞர்களே! நீங்கள் வறுமையால் பாதிக்கப்பட்டு, ஒருவரிடத்திலே பொருளுக்காகச் சென்று, அவர்கள் உங்களை இழிவு படுத்தாமல் இருக்க வேண்டுமா? என் பின்னே வாருங்கள். முப்புர நாயகியின் பாதங்களையே சேருங்கள். தவத்தையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாத பழக்கமுடைய கயவர்களிடத்திலிருந்து என்னைத் தடுத்தாட் கொண்டவள் அவளே!

பாடல் - 55 :

> மின் ஆயிரம் ஒரு மெய் வடிவு ஆகி விளங்குகின்றது
> அன்னாள், அகம் மகிழ் ஆனந்தவல்லி, அருமறைக்கு
> முன்னாய், நடு எங்கும் ஆய், முடிவு ஆய முதல்விதன்னை
> உன்னாது ஒழியினும், உன்னினும், வேண்டுவது ஒன்று இல்லையே.

பொருள் : அபிராமி! நீ ஆயிரம் மின்னல்கள் சேர்ந்தாற் போன்ற வடிவுடையவள்! தன்னுடைய அடியவர்களுக்கு அகமகிழ்ச்சி தரக்கூடிய ஆனந்த வல்லி! அருமையான வேதத்திற்கு தொடக்கமாகவும் நடுவாகவும், முடிவாகவும் விளங்கும் முதற் பொருளானவள்! உன்னை மானிடர் நினையாது விட்டாலும், நினைத்திருந்தாலும், அதனால் உனக்கு ஆகக்கூடிய பொருள் ஒன்றும் இல்லையே!

பாடல் 56 :

> ஒன்றாய் அரும்பி, பலவாய் விரிந்து, இவ் உலகு எங்குமாய்
> நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள்--என்றன், நெஞ்சினுள்ளே
> பொன்றாது நின்று புரிகின்றவா. இப் பொருள் அறிவார்--
> அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும், என் ஐயனுமே.

பொருள் : அபிராமி அன்னையே! நீ ஒன்றாக நின்று, பலவாகப் பிரிந்து, இவ்வுலகில் எங்கும் பரந்திருக்கின்றாய் (பராசக்தியினின்று, பிரிந்த பல சக்திகள்). அவைகளிடத்திலிருந்து நீங்கியும், இருக்கக் கூடியவள் நீ! ஆனால், எளியோனாகிய என் மனத்தில் மட்டும் இடையுறாது நீடு நின்று ஆட்சி செய்கின்றாய். இந்த இரகசியத்தின் உட்பொருளை அறியக் கூடியவர்கள், ஆலிலையில் துயிலும் திருமாலும், என் தந்தை சிவபெருமான் ஆகிய இருவருமே ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 57:

ஐயன் அளந்தபடி இரு நாழி கொண்டு, அண்டம் எல்லாம்
உய்ய அறம் செயும் உன்னையும் போற்றி, ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று, பொய்யும்
மெய்யும் இயம்பவைத்தாய்: இதுவோ, உன்தன் மெய்யருளே?

பொருள் : ஏ, அபிராமி! என் தந்தை சிவபெருமான் அளந்த இரு நாழி நெல்லைக் கொண்டு முப்பத்திரண்டு அறமும் செய்து உலகத்தைக் காத்தவளே! நீ எனக்கு அருளிய செந்தமிழால் உன்னையும் புகழ்ந்து போற்ற அருளினாய்! அதே சமயத்தில் நின் தமிழால் ஒருவனிடத்திலே சென்று இருப்பதையும், இல்லாததையும் பாடும்படி வைக்கிறாய்! இதுவோ உனது மெய்யருள்? (விரைந்து அருள் புரிவாயாக!). + *"ஐயன் அளந்த படியிருநாழி" என்பது காஞ்சியில் ஏகாம்பரநாதர் நெல்லளந்ததைக் குறித்தது. அதனைப் பெற்ற அபிராமி, காத்தலைச் செய்யும் காமாட்சியாகி, முப்பத்திரெண்டு அறங்களையும் புரிந்து, உலகைப் புரந்தனள் என்பது வழக்கு.*

பாடல் - 58:

அருணாம்புயத்தும், என் சித்தாம்புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம்புயமுலைத் தையல் நல்லாள், தகை சேர் நயனக்
கருணாம்புயமும், வதனாம்புயமும், கராம்புயமும்,
சரணாம்புயமும், அல்லால் கண்டிலேன், ஒரு தஞ்சமுமே.

பொருள் : அபிராமி! வைகறையில் மலர்ந்த தாமரையினிடத்தும் என்னுடைய மனத்தாமரையிலும் வீற்றிருப்பவளே! குவிந்த தாமரை மொக்குப் போன்ற திருமுலையுடைய தையலே! நல்லவளே! தகுதி வாய்ந்த கருணை சேர்ந்த நின் கண் தாமரையும், முகத்தாமரையும், பாதத் தாமரையுமேயல்லாமல், வேறொரு புகலிடத்தை நான் தஞ்சமாக அடைய மாட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 59:

தஞ்சம் பிறிது இல்லை ஈது அல்லது, என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன், ஒற்றை நீள்சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலராகி நின்றாய்: அறியார் எனினும்
பஞ்சு அஞ்சு மெல் அடியார், அடியார் பெற்ற பாலரையே.

பொருள் : அபிராமித் தாயே! நீண்ட கரும்பு வில்லையும், ஐவகை மலர் அம்புகளையும் கொண்டவளே! உன்னைத் தவிர வேறொரு புகலிடம் இல்லையென்று தெரிந்தும், உன்னுடைய தவநெறிகளைப் பயிலாமலும், நெஞ்சத்தில் நினையாமலும் இருக்கின்றேன். அதற்காக நீ என்னைத் தண்டிக்கக் கூடாது. புறக்கணிக்காமல் எனக்கு அருள் பாலிக்க வேண்டும். உலகத்திலுள்ள பேதைகளாகிய பஞ்சும் நாணக்கூடிய மெல்லிய அடிகளை உடைய பெண்கள் தாங்கள் பெற்ற குழந்தைகளைத் தண்டிக்க மாட்டார்கள் அல்லவா? அதே போன்றே நீயும் எனக்கு அருள வேண்டும்.

பாடல் - 60:

பாலினும் சொல் இனியாய். பணி மா மலர்ப் பாதம் வைக்க--
மாலினும், தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார் சடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப் பீடம் ஒரு
நாலினும், சால நன்றோ--அடியேன் முடை நாய்த் தலையே?

பொருள் : ஏ, அபிராமி! பாலைவிட இனிமையான சொல்லை உடையவளே! நீ உன்னுடைய திருவடித் தாமரையை, திருமாலைக் காட்டிலும் உயர்ந்த தேவர்கள் வணங்கும் சிவபிரானின் கொன்றையணிந்த நீண்ட சடைமுடியில் பதித்தாய். அடுத்துன் அருட்கண்கள் பட்டு உயர்ந்து நிற்கும் நால்வகை வேதத்திலே உன்னுடைய திருவடித் தாமரைகளைப் பதித்தாய். ஆனால் இன்று நாற்றமுடைய நாயாகிய என்னுடைய தலையையும், உன்னுடைய திருவடிகளில் சேர்த்துக் கொண்டாய். (மேற்கூறிய சிவபெருமான், நான்கு வேதங்களோடு என்னையும் ஒப்பிட, நான் அவ்வளவு சிறந்தவனா?)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 61:

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து,
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய், நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய், என்ன பேறு பெற்றேன்.--
தாயே, மலைமகளே, செங்கண் மால் திருத் தங்கைச்சியே.

பொருள் : தாயே! மலையரசர் மகளே! சிவந்த கண்களையுடைய திருமாலின் தங்கையே! நாயாகவுள்ள என்னையும் இங்கே ஒரு பொருட்டாக மதித்து, நீயே, தன்னை மறந்து ஆட்கொண்டு விட்டாய்! அது மட்டுமல்லாமல், உன்னையே உள்ளபடியே அறிந்து கொள்ளும் அறிவையும் பேயேனாகிய எனக்குத் தந்தாய். நான் பெறுதற்கரிய பேறல்லவோ பெற்றேன்!

பாடல் - 62:

தங்கச் சிலை கொண்டு, தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங் கண் கரி உரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி, கோகனகச்
செங் கைக் கரும்பும், மலரும், எப்போதும் என் சிந்தையதே.

பொருள் : ஏ, அபிராமி! உன் கணவர் பொன் மலையை வில்லாகக் கொண்டு, முப்புரத்தை எரித்த, சிவந்த கண்களை உடைய, யானைத்தோலைப் போர்த்திய சிறந்த காவலனாவான். அன்னவனின் திருமேனியையும், உன்னுடைய குரும்பையொத்த கொங்கையால் சோர்வடையச் செய்தவளே! பொன் போன்ற சிவந்த கைகளில் கரும்பு வில்லோடும், மலர் அம்போடும், என் சிந்தையில் எப்போதும் உறைந்திருப்பாய்.

பாடல் - 63:

தேறும்படி சில ஏதுவும் காட்டி, முன் செல்கதிக்குக்
கூறும் பொருள், குன்றில் கொட்டும் தறி குறிக்கும்,--சமயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்,
வேறும் சமயம் உண்டு என்று கொண்டாடிய வீணருக்கே.

பொருள் : ஆறு சமயங்களுக்கு தலைவியாக இருக்கக் கூடியவள், அபிராமி அன்னையாகும். அவளே பேதையர்களுக்கு நற்கதியடைவதற்குச் சில உண்மையான வழிகளைக் காட்டுபவள். அப்படியிருந்தும் சில வீணர்கள் பிற சமயம் உண்டென்று அலைந்து திரிகிறார்கள். இவர்களின் செயல் பெரிய மலையைத் தடி கொண்டு தகர்ப்பேன் என்பது போல் உள்ளது.

பாடல் - 64:

வீணே பலி கவர் தெய்வங்கள்பால் சென்று, மிக்க அன்பு
பூணேன், உனக்கு அன்பு பூண்டுகொண்டேன், நின்புகழ்ச்சி அன்றிப்
பேணேன், ஒரு பொழுதும், திருமேனி ப்ரகாசம் அன்றிக்
காணேன், இரு நிலமும் திசை நான்கும் ககனமுமே.

பொருள் : ஏ, அபிராமி! உன்னையன்றி வீணாகப் பலி வாங்கும் வேறொரு தெய்வத்தை நாடேன். உன்னையே அன்பு செய்தேன். உன்னுடைய புகழ் வார்த்தையன்றி வேறொரு வார்த்தை பேசேன். எந்நேரமும் உன்னுடைய திருமேனிப் பிரகாசத்தைத் தவிர, வேறொன்றும் இவ்வுலகத்திலும், நான்கு திசைகளிலும் காண மாட்டேன்.

பாடல் - 65:

ககனமும் வானும் புவனமும் காண, விற் காமன் அங்கம்
தகனம் முன் செய்த தவம்பெருமாற்கு, தடக்கையும் செம்
முகனும், முந்நான்கு இருமூன்று எனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயது அன்றோ?--வல்லி. நீ செய்த வல்லபமே.

பொருள் : ஏ, ஆனந்தவல்லி அபிராமி! உனது கணவனாகிய சிவபெருமான் ஒரு காலத்தில் மன்மதனை அண்டமும், வானமும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியும் காணும்படியாக எரித்தார். அப்படிப்படவருக்கும் நீ ஆறுமுகமும், பன்னிரு கைகளும் சிறந்த அறிவும் கொண்ட அழகனாகிய முருகனைப் பெற சக்தியைக் கொடுத்தாய். உன்னுடைய அன்புதான் என்னவோ!

பாடல் - 66 :

வல்லபம் ஒன்று அறியேன், சிறியேன், நின் மலரடிச் செய்
பல்லவம் அல்லது பற்று ஒன்று இலேன், பசும் பொற் பொருப்பு-
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய். வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும், நின் திரு நாமங்கள் தோத்திரமே.

பொருள் : ஏ, அபிராமியே! பசுமையான பொன்மலையை வில்லாக உடைய சிவபிரானின் இடப்பாகத்தில் அமர்ந்தவளே! நான் அறிவே இன்னதென்று அறியாதவன். மிகவும் சிறியவன். நின் மலர்ப்பாதத் துணையன்றி வேறொரு பற்றுமில்லாதவன். ஆகையால் பாவியாகிய நான் உன்னைப் பாடிய பாடலில் சொற் குற்றங்கள் இருப்பினும், தாயே! நீ தள்ளி விடுதல் ஆகாது. ஏனெனில், அது உன்னைப் பாடிய தோத்திரங்களேயாகும்.

பாடல் - 67 :

தோத்திரம் செய்து, தொழுது, மின் போலும் நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர்--வண்மை, குலம்,
கோத்திரம், கல்வி, குணம், குன்றி, நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர்--பார் எங்குமே.

பொருள் : அன்னையே! அபிராமி! உன்னையே பாடி, உன்னையே வணங்காமல், மின்போலும் ஒளியுடைய நின் தோற்றத்தை ஒரு மாத்திரை நேரமாகிலும் மனதில் நினையாத பேர்களுக்கு, என்ன நேரும் தெரியுமா? அவர்கள் கொடைக்குணம், சிறந்த குலம், கல்வி குணம் இவையெல்லாம் குன்றி, வீடு வீடாகச் சென்று, ஓடேந்தி உலகெங்கும் பிச்சை எடுத்துத் திரிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 68:

பாரும், புனலும், கனலும், வெங் காலும், படர் விசும்பும்,
ஊரும் முருகு சுவை ஒளி ஊறு ஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாம சுந்தரி, சீறடிக்கே
சாரும் தவம், உடையார் படையாத தனம் இல்லையே.

பொருள் : ஏ, அபிராமி! நீ நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐவகைப் பூதங்களாகவும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற அவைகளின் தன்மையாகவும் நிற்கக் கூடியவள். சுந்தரியே! உன்னுடைய செல்வம் பொருந்திய திருவடிகளைச் சார்ந்தவர்கள் சிறந்த தவத்தைப் பெறுவர். அத்துடன் அவர்கள் அடையாத செல்வமும் இல்லை எனலாம் (எல்லாச் செல்வமும் பெறுவர்).

பாடல் - 69 :

தனம் தரும், கல்வி தரும், ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே-
கனம் தரும் பூங் குழலாள், அபிராமி, கடைக்கண்களே,

பொருள் : ஏ, அபிராமி! மேகம் போலும் அடர்ந்த கூந்தலையுடையவளே! நின்னுடைய அருள் பெருக்கும் கடைக்கண்களை வணங்கினாலே போதும். அக்கண்களே அடியார்களுக்குச் சிறந்த செல்வத்தைத் தரும். நல்ல கல்வி தரும். சோர்வடையாத மனத்தைத் தரும். தெய்வீக அழகைத் தரும். நெஞ்சில் வஞ்சம் கலவாத உறவினர்களைத் தரும். நல்லன எல்லாம் கிட்டும்.

பாடல் - 70 :

கண்களிக்கும்படி கண்டுகொண்டேன், கடம்பாடவியில் பண்
களிக்கும் குரல் வீணையும், கையும் பயோதரமும்,
மண் களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி, மதங்கர்க்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : ஏ, அபிராமி! உன்னை என் கண்கள் களிக்குமாறு கண்டு கொண்டேன். கடம்ப வனம் என்னும் பதியில் உறைந்த அபிராமி அன்னையே! நின் பேரழகைக் கண்டு கொண்டேன். பண்ணும் விரும்புகின்ற குரல், வீணை தாங்கிய அழகிய கரங்கள், திருமுலை தாங்கிய திருமார்பு, மண்மகள் மகிழும் பச்சை நிறம் - இவைகளெல்லாம் கொண்ட மதங்கர் எனும் குலத்தில் தோன்றிய பேரழகானவளே! உன்னைக் கண்டு கொண்டேன்.

பாடல் - 71 :

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி, அரு மறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள், பனி மா மதியின்
குழவித் திருமுடிக் கோமளயாமளைக் கொம்பு இருக்க--
இழவுற்று நின்ற நெஞ்சே.-இரங்கேல், உனக்கு என் குறையே?

பொருள் : அபிராமித் தேவி எவருக்கும் இணையில்லாத திருமேனியழகுடையவள். வேதப் பொருளிலே திருநடம் புரிந்த சிவந்த பாதத் தாமரைகளை உடையவள். குளிர்ந்த இளம்பிறையைத் தன் திருமுடிகளில் சூடிய கோமளவல்லி, இனிமையான கொம்பான தேவி இருக்க, நெஞ்சே! ஊக்கம் குறைந்து, ஏக்கம் கொள்ளாதே! உற்ற இடத்தில் ஊன்று கோலாக அன்னை இருக்க உனக்கு ஏன் குறை?

பாடல் - 72:

எங்குறை தீரநின்று ஏற்றுகின்றேன், இனி யான் பிறக்கில்,
நின் குறையே அன்றி யார் குறை காண்?-இரு நீள் விசும்பின்
மின் குறை காட்டி மெலிகின்ற நேர் இடை மெல்லியலாய்.-
தன் குறை தீர, எம்கோன் சடை மேல் வைத்த தாமரையே.

பொருள் : ஏ, அபிராமி! என்னுடைய குறைகளெல்லாம் தீர உன்னையே வணங்குகின்றேன். இக்குறையுடைய பிறவியை நான் மறுபடியும் எடுத்தால் என் குறையே அல்ல. உன்னுடைய குறையேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகன்ற வானத்தில் தோன்றும் அம்மின்னலையும் பழிக்குமாறுள்ள நுண்ணிய இடையையுடையவளே! எம்முடைய தந்தை சிவபெருமான், தன் குறை தீர, தனது திருமுடி மேல் சாத்திய அழகிய பாதத் தாமரைகளையுடையவளே!

பாடல் - 73 :

தாமம் கடம்பு, படை பஞ்ச பாணம், தனுக் கரும்பு,
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது, எமக்கு என்று வைத்த
சேமம் திருவடி, செங்கைகள் நான்கு, ஒளி செம்மை, அம்மை
நாமம் திரிபுரை, ஒன்றோடு இரண்டு நயனங்களே.

பொருள் : ஏ, அபிராமி! உன்னுடைய மாலை, கடம்ப மாலை, படைகளோ பஞ்ச பாணங்கள் (ஐவகை மலர் அம்புகள்) வில்லோ கரும்பு உன்னுடைய நெற்றிக் கண்களோ அருட் கண்கள் நான்கு கரங்களோ செந்நிறமாகும். உன்னை வயிரவர்கள் வணங்கும் நேரமோ நள்ளிரவாகும். திரிபுரை என்ற பெயரும் உண்டும். நீ எனக்கு மேலாக வைத்திருக்கும் செல்வம் நின்னுடைய திருவடித் தாமரைகளேயாகும்.

பாடல் - 74 :

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்,
அயனும் பரவும் அபிராம வல்லி அடி இணையைப்
பயன் என்று கொண்டவர், பாவையர் ஆடவும் பாடவும், பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

பொருள் : முக்கண்களையுடைய சிவன், திருமால், பிரும்மா முதலானோரும் வணங்கக்கூடிய தேவி அபிராமியாகும். அவளுடைய பாதங்களிலே சரண் என்றடைந்த அடியார்கள் இந்திர போகத்தையும் விரும்ப மாட்டார்கள். அரம்பை முதலான தேவ மகளிர் பாடி, ஆட, பொன் ஆசனமே கிட்டினும், அன்னையின் பாதச் சேவையையே பெரிதென நினைவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 75 :

தங்குவர், கற்பக தாருவின் நீழலில், தாயர் இன்றி
மங்குவர், மண்ணில் வழுவாய் பிறவியை,-மால் வரையும்,
பொங்கு உவர் ஆழியும், ஈரேழ் புவனமும், பூத்த உந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

பொருள் : பெரிய மலைகளையும், நுரைக் கடலையும், பதினான்கு உலகத்தையும் பெற்றெடுத்த ஏ அபிராமி! மணம் வீசும் பூவையணிந்த குழலுடையவளே! உன்னுடைய திருமேனியை இடையுறாது சிந்தையிலே தியானிப்பவர் சகலத்தையும் தருகின்ற கற்பக மரத்தின் நிழலையும் பெற்று இன்புறுவர். இடைவிடாது தோன்றும் மானிடப் பிறவியும் இல்லாமல் போவர். அத்தகைய பல பிறவிகளில் பெற்றெடுக்கும் மானிடத் தாயாரும் இல்லாமல் போவர் (என்றும் நிலையாகிய தாய் நீயே).

பாடல் - 76 :

குறித்தேன் மனத்தில் நின் கோலம் எல்லாம், நின் குறிப்பு அறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி, வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப் பிரான் ஒரு கூற்றை, மெய்யில்
பறித்தே, குடிபுகுதும் பஞ்ச பாண பயிரவியே.

பொருள் : ஏ, அபிராமி! பஞ்ச பாணங்களையுடையவளே! உன்னுடைய திருக்கோலத்தையே மனத்தில் நினைத்து தியானிக்கின்றேன். உன்னுடைய திருவருளைக் கொண்டு, மருட்டுகின்ற யமன்வரும் வழியைக் கண்டு கொண்டேன். கண்டதும் அல்லாமல், அவன் வருவதற்கு முன், அவன் வழியை அடைத்தும் விட்டேன் (எல்லாம் நின் திருவருளே). வண்டு மொய்க்கும் தேனொடு கூடிய கொன்றை மாலையை அணிந்த சிவபெருமானின் இடப்பாகத்தை வெற்றி கொண்டு, தானொரு பாதியாக அமர்ந்தவளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 77 :

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி, வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர் சண்டி, காளி, ஒளிரும் கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி--என்றே
செயிர் அவி நான்மறை சேர் திருநாமங்கள் செப்புவரே.

பொருள் : ஏ, அபிராமி! உன்னை, பைரவர் வணங்கக்கூடிய பைரவி பஞ்சமி பாசத்தையும், அங்குசத்தையும் உடைய பாசாங்குசை ஐவகை மலர் அம்புகளையுடைய பஞ்சபாணி வஞ்சகரின் உயிரை மாய்த்து, அவர்கள் இரத்தத்தைக் குடிக்கின்ற மேலான சண்டி மகா காளி ஒளிவீசும் கலை பொருந்திய வயிரவி, சூரிய, சந்திர மண்டலத்திலுள்ளோர்க்கு மண்டலி சூலத்தையுடைய சூலி உலகளந்த வராகி என்றெல்லாம் அடியார் பல்வேறு நாமங்களைச் சொல்லி வணங்குவர். குற்றமற்ற வேதங்களிலும், நின் திரு நாமங்கள் இவ்வாறு கூறப்படுகின்றன. அதையே அடியார்கள் மீண்டும் மீண்டும் சொல்லி வாழ்த்தி வணங்கி வழிபடுகின்றனர்.

பாடல் - 78:

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி, அணி தரளக்
கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்,
துப்பும், நிலவும் எழுதிவைத்தேன், என் துணை விழிக்கே.

பொருள் : என் தாயே! அபிராமி! உன்னையே என் இரு கண்களில் எழுதி வைத்தேன். அந்த உருவம் எப்படிப் பட்டதெனின், மாணிக்கப் பூண் அணிந்த பொற்கலசம் போன்ற திருமுலை அம்முலைமேல் பூசிய மணம் வீசும் சிறந்த சந்தனக் கலவை அங்கே புரளும் அணிகலன்கள் சிறந்த முத்துக் கொப்பு வைரத்தோடு செழுமையான கருணைமிகும் கடைக்கண்கள் குளிர்ச்சியை உமிழ்கின்ற நிலவைப் போன்ற திருமுகம் இவைகளெல்லாம் கொண்ட வடிவையே என் மனத்தில் இருத்தினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 79:

விழிக்கே அருள் உண்டு, அபிராம வல்லிக்கு, வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சு உண்டு எமக்கு, அவ்வழி கிடக்க,
பழிக்கே சுழன்று, வெம் பாவங்களே செய்து, பாழ் நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு, என்ன கூட்டு இனியே?

பொருள் : அபிராமியின் விழிகளில் என்றும் அருளுண்டு. வேதமுறைப்படி அவளை வழிபட எனக்கு நெஞ்சமும் உண்டு. ஆகையால் பழியையும், பாவத்தையுமே விளைவித்து, பாழ் நரகக்குழியில் அழுந்தி வாடும் பேதையர்களோடு எனக்கு இனி என்ன தொடர்பு? (அபிராமி அன்னை சிறந்த துணையாவாள்).

பாடல் - 80 :

கூட்டியவா என்னைத் தன் அடியாரில், கொடிய வினை
ஓட்டியவா, என்கண் ஓடியவா, தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா, கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா,
ஆட்டியவா நடம்--ஆடகத் தாமரை ஆரணங்கே.

பொருள் : ஏ, அபிராமித்தாயே! பொற்றாமரையில் வாழும் பேரழகானவளே! என்னை உன் அடியார்கள் கூட்டத்தில் சேர்த்தவளே! நான் செய்த கொடிய வினைகளையெல்லாம் ஒழித்தவளே! ஒன்றையும் அறியாத எனக்கு, உன்னுடைய உண்மை உருவைக் காட்டியவளே! உன்னைக் கண்ட என் கண்ணும், மனமும் களிநடம் புரிகின்றது. இவ்வாறெல்லாம் என்னை நாடகமாடச் செய்தவளே! உன்னுடைய கருணையத்தான் என்னவென்பேன்.

பாடல் - 81:

அணங்கே.-அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்,
வணங்கேன் ஒருவரை, வாழ்த்துகிலேன் நெஞ்சில், வஞ்சகரோடு
இணங்கேன், எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன், அறிவு ஒன்று இலேன், என்கண் நீ வைத்தபேர் அளியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : ஏ, அபிராமி! என்னிடத்தில் நீ வைத்த பெருங்கருணையினால் நான் கள்ள நெஞ்சம் உடையவரிடம் நெருங்க மாட்டேன். உலகத்தில் மற்ற சக்திகளெல்லாம் உன்னுடைய பரிவாரத் தேவதைகளேயாகும். ஆதலினால் நான் அவர்களை வணங்க மாட்டேன் ஒருவரையும் போற்றவும் மாட்டேன் நான் அறிவில்லாதவனாயினும், என்னுடையதெல்லாம் உன்னுடையது என்று உன்னை வணங்கும் சில ஞானிகளோடு மட்டுமே பிணங்காது சேர்ந்து உறவாடுவேன்!

பாடல் - 82 :

அளி ஆர் கமலத்தில் ஆரணங்கே. அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர் திருமேனியை உள்ளுந்தொறும்,
களி ஆகி, அந்தக்கரணங்கள் விம்மி, கரைபுரண்டு
வெளியாய்விடின், எங்ஙனே மறப்பேன், நின் விரகினையே?

பொருள் : ஏ, அபிராமி! வண்டுகள் ஆர்க்கும் தாமரையில் வாழ்பவளே! பேரழகானவளே! உலகமெல்லாம் ஒளியாக நின்ற, ஒளிவீசும் உன்னுடைய திருமேனியை நான் நினைக்கும்தோறும் களிப்படைகின்றேன். அக்களிப்பின் மிகுதியால் அந்தக் காரணங்கள் விம்மிக் கரைபுரண்டு, பரவெளியாகவுள்ள ஆகாயத்தில் ஒன்றி விடுகின்றன. இவ்வளவு பேரருள் காட்டியருளிய உன் தவநெறியை நான் எவ்வாறு மறப்பேன்? (மறவேன் ஒருபோதும்).

பாடல் - 83:

விரவும் புது மலர் இட்டு, நின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும், பகீரதியும்,
உரவும் குலிகமும், கற்பகக் காவும் உடையவரே.

பொருள் : அன்னையே, அபிராமி! உன்னுடைய மணம்மிக்க திருவடித் தாமரைகளில் தேன் சிந்தும் புதுமலர்களை வைத்து இரவு, பகலாக தியானம் செய்யும் பெரியோர்கள், தேவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய யாவரும் இந்திர பதவி, ஐராவதம் என்ற யானை, ஆகாய கங்கை, வலிமையான வஜ்ஜிர ஆயுதம், கற்பகச் சோலை முதலியவைகளை முறையாகப் பெற்று பெருவாழ்வு வாழ்கின்றனர். (எனக்கும் அருள்வாயாக!)

பாடல் - 84 :

உடையாளை, ஒல்கு செம்பட்டுடையாளை, ஒளிர்மதிச் செஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சு அடையாளை, தயங்கு நுண்ணூல்
இடையாளை, எங்கள் பெம்மான் இடையாளை, இங்கு என்னை இனிப்
படையாளை, உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.

பொருள் : ஏ, அடியார்களே! என் அபிராமி, இடையில் ஒளிவீசும் செம்பட்டு அணிந்தவள். ஒளி வீசும் பிறைச் சந்திரனை அணிந்த சடையை உடையவள். வஞ்சகர்களின் நெஞ்சிலே குடி கொள்ளாதவள். ஒளி விளங்கும் நுண்மையான நூலிடையாள். சிவபெருமானின் இடப்பாகத்தில் குடி கொண்டவள். என் அன்னையாகிய இவள் அந்நாள் என்னை அடிமையாகக் கொண்டாள். என்னை இனி இவ்வுலகில் பிறக்க வைக்க மாட்டாள். அத்தகைய தேவியை நீங்களும் தொழுது போற்றுங்கள். நீங்களும் பிறவி எடுக்காப் பேறெய்த அவளையே தியானம் செய்யுங்கள்.

பாடல் - 85 :

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும், பனிச் சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும், என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திரு மேனியும், சிற்றிடையும்,
வார்க் குங்கும முலையும், முலைமேல் முத்து மாலையுமே.

பொருள் : ஏ, அபிராமி! நான் எத்திசையை நோக்கினும் உன்னுடைய படைகளாகிய பாசமும், அங்குசமும், வண்டுகள் மறைந்திருக்கும் மலர் அம்பு ஐந்தும், கரும்பு வில்லும், என்னுடைய துன்பங்களெல்லாம் தீர்க்கக் கூடிய திரிபுரையாகிய நின் திருமேனி அழகும், சிற்றிடையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சையணிந்த குங்குமம் தோய்ந்த மார்பகங்களும், அவற்றின் மேலே அசையும் முத்துமாலையும் என்கண்முன் காட்சியாய் நிற்கின்றன. (எங்கும் பரந்தவள்).

பாடல் - 86 :

மால் அயன் தேட, மறை தேட, வானவர் தேட நின்ற
காலையும், சூடகக் கையையும், கொண்டு--கதித்த கப்பு
வேலை வெங் காலன் என்மேல் விடும்போது, வெளி நில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே.

பொருள் : ஏ, அபிராமி! பாலையும், தேனையும், பாகையும் ஒத்த இனிய மொழியுடையவளே! இயமன் கோபித்துப் பல கிளைகளைக் கொண்ட சூலத்தை என்மீது செலுத்தும்போது, திருமாலும், பிரம்மனும், வேதங்களும், வானவர்களும் தேடியும் காணாத திருப்பாதங்களையும் சங்கையணிந்த திருக்கரங்களையும் கொண்டு நீ என் முன்னே காட்சி தந்தருள வேண்டும்.

பாடல் - 87 :

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தம், என்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்,--விழியால் மதனை
அழிக்கும் தலைவர், அழியா விரதத்தை அண்டம் எல்லாம்
பழிக்கும்படி, ஒரு பாகம் கொண்டு ஆளும் பராபரையே.

பொருள் : ஏ, அபிராமி! நெற்றிக்கண் கொண்டு மன்மதனை எரித்த எம்பிரானாகிய சிவபெருமானின் அழியாத யோக விரதத்தை எவ்வுலகத்தவரும் பழிக்குமாறு அவனது இடப்பக்கத்தில் இடம்கொண்டு ஆள்பவளே! எளியோனாகிய என் கண்களிலும், என் செயல்களிலும் வாக்குக்கும், மனத்திற்கும் எட்டாத நின் திருவுருவமே தோன்றிக் காட்சியளிக்கின்றதே! (ஈதென்ன வியப்போ!)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 88:

பரம் என்று உனை அடைந்தேன், தமியேனும், உன் பத்தருக்குள்
தரம் அன்று இவன் என்று தள்ளத் தகாது--தரியலர்தம்
புரம் அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய, போதில் அயன்
சிரம் ஒன்று செற்ற, கையான் இடப் பாகம் சிறந்தவளே.

பொருள் : ஏ, அபிராமி! பகைவர்களது முப்புரத்தை எரிக்க மேருமலையை வில்லாகக் கொண்டவரும், திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய பிரம்மனின் சிரம் ஒன்றைக் கிள்ளியழித்தவருமான சிவபெருமானின் இடப்பாகத்தில் சிறந்து வீற்றிருப்பவளே! யாருமே துணையில்லாத நான், நீயே கதியென்று சரணடைந்தேன். ஆகையால் எளியோனாகிய என்னிடத்தில் உன் பக்தருக்குள்ள தரம் இல்லையென்று நீ தள்ளி விடுதல் தகாது. அது உன் அருளுக்கும் அறமன்று.

பாடல் - 89 :

சிறக்கும் கமலத் திருவே, நின்சேவடி சென்னி வைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும், துரியம் அற்ற
உறக்கம் தர வந்து, உடம்போடு உயிர் உறவு அற்று அறிவு
மறக்கும் பொழுது, என் முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே.

பொருள் : அபிராமித் தாயே! சிறந்த தாமரையில் வீற்றிருக்கும் செல்வமே! என்னுடைய உயிருக்கும், உடலுக்கும் தொடர்பற்று, அறிவு மறதி மிகுந்து இருக்கும் வேளையில் உன்னுடைய சேவடி என்னுடைய சென்னியில் படர வேண்டும். மேலும், பற்றின்மையை அனுக்கிரகிக்கும் உன்னுடைய துணைவரும் வந்து மோன நிலையில் நான் அறிதுயிலில் அமரும் பேற்றை அருள வேண்டும்.

பாடல் - 90 :

வருந்தாவகை, என் மனத்தாமரையினில் வந்து புகுந்து,
இருந்தாள், பழைய இருப்பிடமாக, இனி எனக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தாது ஒரு பொருள் இல்லை--விண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.

பொருள் : ஏ, அபிராமி! உலகில் எனக்கு இனிக் கிடைக்காத பொருளென்று ஏதுமில்லை. என்னுடைய உள்ளத் தாமரையை உன்னுடைய பழைய உறைவிடமாகக் கருதி வந்தமர்ந்தாய். மேலும் நான் பிறந்தும், இறந்தும் வருந்தாமல் இருக்க அருள் புரிந்தாய். பாற்கடலில் தோன்றிய அமிர்தத்தை திருமால் தேவர்களுக்குக் கொடுக்க முதலாக இருந்த அபிராமியே, எனக்கு இனியேது குறை?

பாடல் - 91 :

மெல்லிய நுண் இடை மின் அனையாளை விரிசடையோன்
புல்லிய மென் முலைப் பொன் அனையாளை, புகழ்ந்து மறை
சொல்லியவண்ணம் தொழும் அடியாரைத் தொழுமவர்க்கு,
பல்லியம் ஆர்த்து எழ, வெண் பகடு ஊறும் பதம் தருமே.

பொருள் : அபிராமித் தேவி! நீ மின்னல் போலும் மெல்லிய இடையினை உடையவள் விரிந்த சடைமுடி நாதர் சிவபிரானோடு இணைந்து நிற்கும் மென்மையான முலைகளையுடையவள் பொன்னைப் போன்றவள். இவ்வாறாகிய உன்னை வேதப்படி தொழுகின்ற அடியார்க்கும் அடியவர்கள், பல்வகை இசைக்கருவிகள் இனிதாக முழங்கிவர, வெள்ளையானையாகிய ஐராவதத்தின் மேலே ஊர்ந்து செல்லும் இந்திரப் பதவி முதலான செல்வ போகங்களைப் பெறுவர்.

பாடல் - 92 :

பதத்தே உருகி, நின் பாதத்திலே மனம் பற்றி, உன்தன்
இதத்தே ஒழுக, அடிமை கொண்டாய், இனி, யான் ஒருவர்
மதத்தே மதி மயங்கேன், அவர் போன வழியும் செல்லேன்--
முதல் தேவர் மூவரும் யாவரும் போற்றும்முகிழ் நகையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் : ஏ, அபிராமி! முதல் என்று கூறப்படும் மும்மூர்த்திகளும் மற்றுமுள்ள தேவர்களும் போற்றித் தொழுகின்ற புன்னகையையுடையவளே! உன்னுடைய ஞானத்திற்காகவே உருகிநின்ற என்னை உன் பாதத்திலேயே பற்றும்படி செய்து, உன் வழிப்படியே யான் நடக்கும்படி அடிமையாகக் கொண்டவளே! இனி நான் வேறொரு மதத்திலே மன மயக்கம் கொள்ள மாட்டேன். அவர்கள் செல்லும் வழியிலேயும் செல்ல மாட்டேன்.

பாடல் - 93 :

நகையே இது, இந்த ஞாலம் எல்லாம் பெற்ற நாயகிக்கு,
முகையே முகிழ் முலை, மானே, முது கண் முடிவுயில், அந்த
வகையே பிறவியும், வம்பே, மலைமகள் என்பதும் நாம்,
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

பொருள் : உலகமெல்லாம் பெற்றெடுத்த தலைவியாகிய அபிராமி அன்னையின் திரு மார்பகங்களைத் தாமரை மொட்டு என்கிறார்கள். கருணை ததும்பி நிற்கும் முதிர்ந்த கண்களை, மருட்சி மிக்க மான் கண்கள் என்கிறார்கள். முடிவில்லாதவள் என்றெல்லாம் பக்தர்கள் கூறுகின்றார்கள். இவையெல்லாமே மாறுபட்ட கூற்றுகள். இவைகளை நினையும் போது எனக்கு நகைப்பே உண்டாகிறது. இனிமேல் நாம் செய்யக்கூடியது இத்தகைய கற்பனைகளைத் தள்ளி அவளின் உண்மை நிலையை அறிதலேயாகும்.

பாடல் - 94 :

விரும்பித் தொழும் அடியார் விழிநீர் மல்கி, மெய் புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தம் ஆகி, அறிவு இழந்து
கரும்பின் களித்து, மொழி தடுமாறி, முன் சொன்ன எல்லாம்
தரும் பித்தர் ஆவர் என்றால் அபிராமி சமயம் நன்றே.

பொருள் : அபிராமி அம்மையைப் பக்தியோடு விரும்பித்தொழும் அடியவர்களின் கண்களில் நீரானது பெருகி, மெய்சிலிர்த்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தம் ததும்பி, அறிவு மறந்து, வண்டைப் போல் களித்து, மொழி தடுமாறி, முன்பு சொல்லிய பித்தரைப் போல் ஆவார்கள் என்றால், அப்பேரானந்தத்திற்கு மூலமான அம்பிகையின் சமயமே மிகச்சிறந்ததாகும்.

பாடல் - 95 :

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை, உனக்கே பரம்: எனக்கு உள்ளம் எல்லாம்
அன்றே உனது என்று அளித்து விட்டேன்:- அழியாத குணக்
குன்றே, அருட்கடலே, இமவான் பெற்ற கோமளமே.

பொருள் : ஏ, அபிராமி! அழியாத குணக்குன்றே! அருட்கடலே! மலையரசன் பெற்றெடுத்த அழகிய கோமள வல்லியே! எனக்கு உரிமை என்று எப்பொருளும் இல்லை. அனைத்தையும் அன்றே உன்னுடையதாக்கி விட்டேன். இனி எனக்கு நல்லதே வந்தாலும், தீமையே விளைந்தாலும், அவற்றை உணராது விருப்பு, வெறுப்பற்றவனாவேன். இனி என்னை உனக்கே பரம் என்று ஆக்கினேன்.

பாடல் - 96 :

கோமளவல்லியை, அல்லியந் தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில்தன்னை, தம்மால்
ஆமளவும் தொழுவார், எழு பாருக்கும் ஆதிபரே.

பொருள் : என் அபிராமி அன்னையை, இளமையும் அழகும் மிக்க கோமள வல்லியை, அழகிய மென்மையான தாமரையைக் கோயிலாகக் கொண்டு உறையும் யாமளவல்லியை, குற்றமற்றவளை, எழுதுதற்கு இயலாத எழில் கொண்ட திருமேனியுடையவளை, சகல கலைகளிலும் வல்ல மயில் போன்றவளை, தம்மால் கூடுமானவரை தொழுகின்ற அடியவர்களே, ஏழுலகையும் ஆட்சி புரியும் அதிபர்கள் ஆவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 97 :

ஆதித்தன், அம்புலி, அங்கி குபேரன், அமரர்தம் கோன்,
போதிற் பிரமன் புராரி, முராரி பொதியமுனி,
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர், தையலையே.

பொருள் : என்னுடைய அன்னை அபிராமியை, புண்ணியம் பல செய்து, அவற்றின் பயனையும் அடைந்த சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், தேவர்களின் தலைவன் இந்திரன், தாமரை மலரில் உதித்த பிரம்மன், முப்புரங்களை எரித்த சிவபெருமான், முரனைத் தண்டித்த திருமால், பொதியமலை முனியாகிய அகத்தியர், கொன்று போர் புரியும் கந்தன், கணபதி, மன்மதன் முதலாகிய எண்ணற்ற தேவர்கள் அனைவரும் போற்றித் துதிப்பர்.

பாடல் - 98 :

தைவந்து நின் அடித் தாமரை சூடிய சங்கரற்கு
கைவந்த தீயும், தலை வந்த ஆறும், கரலந்தது எங்கே?-
மெய் வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில், புகல் அறியா மடப் பூங் குயிலே.

பொருள் : ஏ, அபிராமி! நீ உண்மை பொருந்திய நெஞ்சைத் தவிர வஞ்சகர்களுடைய பொய் மனத்தில் ஒருபோதும் வந்து புகுந்தறியாதவள். பூங்குயில் போன்றவளே! உன்னுடைய பாதத்தாமரையைத் தலையில் சூடிக் கொண்ட சிவபெருமானாகிய சங்கரனின் கையிலிருந்த தீயும், முடிமேல் இருந்த ஆறும் (ஆகாய கங்கை) எங்கே ஒளிந்து கொண்டனவோ?

பாடல் - 99 :

குயிலாய் இருக்கும் கடம்பாடவியிடை, கோல வியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை, வந்து உதித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலாய் இருக்கும் விசும்பில், கமலத்தின்மீது அன்னமாம்,
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே

பொருள் : ஏ, அபிராமி! அன்று கைலயங்கிரித் தலைவனாகிய சிவபிரானுக்கு மணம் முடித்த மலையரசன் மகளே! கடம்பவனத்தில் உறைந்த குயிலே! இமயமலையில் தோன்றிய் அழகிய மயிலே! ஆகாயத்தில் நிறைந்திருப்பவளே! தாமரை மீது அன்னமாக அமர்ந்திருக்கும் திருக்கோலத்தையுடையவளே! (மதுரையில் குயிலாகவும், இமயத்தில் மயிலாகவும், சிதம்பரத்தில் ஞானசூரிய ஒளியாகவும், திருவாரூரில் அன்னமாகவும் அம்பிகை விளங்குகின்றாள் என்பது வழக்கு).

பாடல் - 100 :

குழையைத் தழுவிய கொன்றையந் தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும், கருப்பு வில்லும்
விழையப் பொரு திறல் வேரியம் பாணமும் வெண் நகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே!

பொருள் : ஏ, அபிராமி! குழையிலே தவழும்படியாகவுள்ள கொன்றை மலரால் தொடுத்த மாலையின் மணம்கமழும் மார்பகங்களையும் தோளையும் உடையவளே! மூங்கிலை ஒத்த அழகிய கரும்பு வில்லும், கலவிபோருக்கு விரும்பக்கூடிய மணம் மிகுந்த ஐவகை மலர் அம்பும், வெண்மையான முத்துப்பல் இதழ்ச் சிரிப்பும், மானை ஒத்த மருண்ட கண்களுமே எப்பொழுதும் என் நெஞ்சில் நிறைந்திருக்கிறது. அத் திருமேனியையே நான் வழிபடுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூ நிறத்தாளை, புவி அடங்கக்
காத்தாளை, ஐங்கணைப் பாசங்குசமும் கருப்புவில்லும்
சேர்த்தாளை, முக்கண்ணியைத், தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே.

பொருள் : எங்கள் தாயானவளை, அபிராமி வல்லியை, எல்லா உலகங்களையும் பெற்றவளை, மாதுளம் பூப்போன்ற நிறத்துடையவளை, உலகமெல்லாம் காத்தவளை, திருக்கரங்களில் மலர் அம்புகள் ஐந்தையும், பாசத்தையும், அங்குசத்தையும், கரும்பு வில்லையும் வைத்திருபவளை, மூன்று கண்களையுடைய தேவியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கும் நேராது உலகில் வளமும் நலமும் பெற்று வாழ்வர்.

"எல்லா உயிர்களிடத்திலும் தேவீ
தாய் வடிவில் இருக்கிறாள்"
தேவீமஹாத்மியம், அத்.5.71

"உபாத்தியாயன், ஆசார்யன், பிதா ஆகியோரைக்
காட்டிலும் **தாய்க்கே மதிப்பு அதிகம்.**
மனுதர்ம சாஸ்திரம், அத்.11.145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

குமரகுருபர சுவாமிகள் அருளிய

சகல கலாவல்லி மாலை

சரஸ்வதி துதி

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந்
   தாங்கவென் வெள்ளை யுள்ளத்
   தண்டா மரைக்குத் தகாது கொலோ
   சக மேழுமளித்
   துண்டானுறங்க வொழித்தான் பித்தாக
   வுண்டாக்கும் வண்ணம்
   கண்டான் சுவை கொள் கரும்பே
   சகல கலாவல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
   தோய்தர நாற்கவியும்
   பாடும் பணியிற் பணித்தருள்வாய்
   பங்க யாசனத்திற்
   கூடும் பசும்பொற் கொடியே
   கனதனக் குன்று மைம்பாற்
   காடுஞ் சுமக்குங் கரும்பே
   சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமு
 தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
 லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
 கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
 சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த
 கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
 வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
 தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
 சகல கலாவல்லியே.

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
 பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
 நெடுந் தாட்கமலத்
தஞ்சத்துவச முயர்த்தோன் செந்
 நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி சொத் திருந்தாய்
 சகல கலாவல்லியே.

6. பண்ணும் பரதமுங் கல்வியுந்
 தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
 காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
 கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
 சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பாட்டும் பொருளும் பொருளாற்
 பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
 யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
 லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
 சகல கலாவல்லியே.

8. சொல்விற்பனமு மவதானமுங்
 கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
 நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
 முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
 சகல கலாவல்லியே.

9. சொற்கும் பொருட்கு முயிராம் மெய்ஞ்
 ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
 நிலத்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
 டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
 சகல கலாவல்லியே.

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
 மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
 படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
 விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வமுளதோ
 சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வராகி மாலை

1. வசீகரணம்

இருகுழை கோமளம் தாள் புஷ்பராகம் இரண்டுகண்ணும்
குரு மணி நீலம் கை கோமேதகம் நகம் கூர்வயிரம்
திருநகை முத்துக் கனிவாய் பவளம் சிறந்தவல்லி
மரகத நாமம் திருமேனியும் பச்சை மாணிக்கமே

2. காட்சி

தோராத வட்டம் முக்கோணம் ஷட்கோணம் துலங்குவட்டத்து
ஈராறிதழ் இட்டு ரீங்காரம் உள்ளிட் டது நடுவே
ஆராதனை செய்து அருச்சித்துப் பூஜித்தடி பணிந்தால்
வாராதிராள் அல்ல வோலை ஞான வாராஹியுமே.

3. பகை தடுப்பு

மெய்ச்சிறத்தாற்பணியார் மனம் காயம் மிகவெகுண்டு
கைச்சிரத் தேந்திப் புலால்நிணம் நாறக் கடித்துதறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வச்சிரத் தந்த முகப்பணியாற் குத்தி வாய்கடித்துப்
பச்சிரத்தம் குடிப்பாளே வாராஹி பகைஞரையே

4. மயக்கு (தண்டினி தியானம்)

படிக்கும் பெரும்புகழ்ப் பஞ்சமி அன்பர் பகைஞர்தமை
அடிக்கும் இரும்புத் தடிகொண்டு பேய்கள் அவர்குருதி
குடிக்கும் குடர்கொண்டு தோள்மாலை இட்டுக் குலாவிமன்றில்
நடிக்கும் வாராஹி பதினா லுலகம் நடுங்கிடவே.

5. வெற்றி ஈர்ப்பு

நடுங்கா வகைஅன்பர் நெஞ்சினிற் புக்கவர் நண்ணலரைக்
கொடும்காளி உண்ணக் கொடுக்கும் குருதிகள் கொப்பளித் திட்
டிடும்பாரக் கொங்கையின் மீதே இரத்தத் திலகம் இடும்
தொடும்கார் மனோன்மணி வாராஹிநீலி தொழில் இதுவே.

6. உச்சாடணம் (ரோகஹறரம்)

வேய்க்குலம் அன்னதிண்தோளாள் வாராஹிதன் மெய்யன்பரை
நோய்க்குலம் என்ன இடும்பு செய்வார்தலை நொய்தழித்துப்
பேய்க்குலம் உண்ணப் பலிகொண்டு போட்டுப் பிணக்குடரை
நாய்க்குலம் கௌவக் கொடுப்பாள் வாராஹி என் நாரணியே.

7. எதிர்ப்புக் கட்டு (சத்ருஹறரம்)

நாசப் படுவர் நடுங்கப்படுவர் நமன் கயிற்றால்
வீசப் படுவர் வினையும் படுவர்இம் மேதினியோர்
ஏசப் படுவர் இழுக்கும் படுவர் என் ஏழைநெஞ்சே
வாசப் புதுமலர்த் தேனாள் வாராஹியை வாழ்த்திலரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பெருவச்யம் (திரிகால ஞானம்)

வாலை புவனை திரிபுரை மூன்றும் இவ் வையகத்திற்
காலையும் மாலையும் உச்சியும் ஆக எக் காலத்துமே
ஆலயம் எய்தி வாராஹிதன் பாதத்தை அன்பில் உன்னி
மாலயன் தேவர் முதலான பேர்களும் வாழ்த்துவரே.

9. பகை முடிப்பு

வருத்திப் பகைத்தீர் என்னோடறியாமல் வானவர்க்காச்
சிரித்துப் புரம் எரித்தோன் வாம பாகத்துத் தேவி எங்கள்
கருத்திற் பயிலும் வாராஹி என் பஞ்சமி கண்சிவந்தாற்
பருத்திப் பொதிக்கிட்ட தீப்பொறி காணும் பகைத்தவர்க்கே.

10. வாக்கு வெற்றி

பாப்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் நின்மலர்ப் பாதம் தன்னிற்
பூப்பட்டதுவும் பொறிபட்டதோ? நின்னை யேபுகழ்ந்து
கூப்பிட்ட துன்செவி கேட்கிலையோ? அண்ட கோளமட்டும்
தீப்பட்ட தோ? பட்டதோ நிந்தை யாளர்தெரு எங்குமே.

11. தேவி வருகை

எங்கும் எரியக் கிரிகள் பொடிபட எம்பகைஞர்
அங்கம் பிளந்திட விண்மண் கிழித்திட ஆர்த்தெழுந்து
பொங்கும் கடல்கள் தவறிடச் சூலத்தைப் போகவிட்டுச்
சிங்கத்தின் மீது வருவாள் வாராஹி சிவசக்தியே.

12. ஆத்ம பூஜை

சக்தி கவுரி மஹமாயி ஆயிஎன் சத்துருவைக்
குத்தி இரணக் குடரைப் பிடுங்கிக் குலாவிநின்றே
இத்திசை எங்கும் நடுங்கக் கிரிகள் இடிபடவே
நித்தம் நடித்து வருவாள் வாராஹி என் நெஞ்சகத்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. தேவிதாபனம் (பில்லி மாரணம்)

நெஞ்சகம் தன்னில் நிறைந்திருக் கின்றவன் நிர்க்குணத்தி
நஞ்சணி கண்டத்தி நாரா யணிதனை நம்புதற்கு
வஞ்சனை பண்ணி மதியாத பேரைவாழ் நாளை உண்ணக்
கொஞ்சி நடந்து வருவாள் வாராஹி குலதெய்வமே.

14. மந்திரபூஜை

மதுமாமிஸம்தனைத் தின்பாள் இவள் என்று மாமறையோர்
அதுவே உதாஸினம் செய்திடுவார் அந்த அற்பர்கள்தம்
கதிர்வாய் அடைத்திட உள்ளம் கலங்கக் கடித்தடித்து
விதிர் வாளில் வெட்டி எறிவாள் வாராஹி என் மெய்த் தெய்வமே.

15. வாராஹி அமர்தல் (மூர்த்தி தியானம்)

ஐயும் கிலியும் எனத்தொண்டர் போற்ற அரியபச்சை
மெய்யும் கருணை வழிந்தோடுகின்ற விழியு(ம்) மலர்க்
கையும் பிரம்பும் கபாலமும் சூலமும் கண் எதிரே
வையம் துதிக்க வருவாள் வாராஹி மலர்க்கொடியே

16. வரம் பொழிதல்

தாளும் மனமும் தலையும் குலையத் தரியலர்கள்
மாளும் படிக்கு வரம் தருவாய்: உன்னை வாழ்த்தும் அன்பர்
கோளும் பகையும் குறியார்கள் வெற்றி குறித்த சங்கும்
வாளும் கடகமும் சூலமும் ஏந்தி வரும் துணையே !

17. வாழ்த்துதல்

வருந்துணை என்று வாராஹி என்றன்னையை வாழ்த்திநிதம்
பொருந்தும் தகைமையைப் பூணா தவர் புலால் உடலைப்
பருந்தும் கழுகும்வெம் பூதமும் வெய்ய பிசாசுகளும்
விருந்துண்ணப் பட்டுக் கிடப்பர்கண்டீர் உடல் வேறுபட்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. நன்னீர் வழங்கல்

வேறாக்கும் நெஞ்சம் வினையும் வெவ்வேறு வெகுண்டுடலம்
கூறாக்கும் நெஞ்சத்திற் செந்நிறம் ஆன குருதிபொங்கச்
சேறாக்கும் குங்குமக் கொங்கையிற் பூசும் திலகம் இடும்
மாறாக்கும் நேமிப் படையாள் தலைவணங்காதவர்க்கே.

19. புனித நீர் அருந்துதல்

பாடகச் சீறடிப் பஞ்சமி அன்பர் பகைஞர்தமை
ஓடவிட் டேகை உலக்கைகொண் டெற்றி உதிரம் எல்லாம்
கோடகத் திட்டு வடித்தெடுத் தூற்றிக் குடிக்கும் எங்கள்
ஆடகக் கும்ப இணைக்கொங்கையாள் எங்கள் அம்பிகையே.

20. மலர் வழிபாடு

தாமக் குழலும் குழையும் பொன் ஒலையும் தாமரைப்பூஞ்
சேமக் கழலும் துதிக்கவந் தோர்க்கு ஜெகம் அதனில்
வாமக் கரள களத்தம்மை ஆதி வாராஹிவந்து
தீமைப் பவத்தைக் கெடுத்தாண்டு கொள்வாள் சிவசக்தியே.

21. தேவி சந்நிதானம் (கர்ம மூலபந்தனம்)

ஆராகிலும் நம்க்கேவினை செய்யின் அவர் உடலும்
கூராகும் வாளுக் கிரை இடுவாள்கொன்றை வேணிஅரன்
சீரார் மகுடத் தடி இணை சேர்க்கும் திரிபுரையாள்
வாராஹி வந்து குடி இருந்தாள் என்னை வாழ்விக்கவே.

22. தேவி துதி மாலை (ஜன்ம துக்க நாசனம்)

தரிப்பாள் கலப்பை என்அம்மை வாராஹிஎன் சத்துருவைப்
பொரிப்பாள் பொறிஎழச் செந்தீயில் இட்டு பொரிந் ததலை
நெரிப்பாள் தலைமண்டை மூளையைத் தின்றுபின் நெட்டுடலை
உரிப்பாள் படுக்க விரிப்பாள் சுக்காக உலர்த்துவளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. புகழ்சொற்பாமாலை (மௌனாந்த யோகம்)

ஊரா கிலும் உடன் நாடாகிலும் அவர்க் குற்றவரோடு
யாரா கிலும்நமக் காற்றுவரோ? அடல் ஆழி உண்டு
காரார் கருத்த உலக்கையும் உண்டு கலப்பை உண்டு
வாராஹி என்னும்மெய்ச் சண்டப் பிரசண்ட வடிவிஉண்டே.

24. படைக்கள வாழ்த்து (பதஞான யோகம்)

உலக்கை கலப்பை ஒளிவிடு வாள்கட காழிசங்கம்
வலக்கை இடக்கையில் வைத்த வாராஹிஎன் மாற்றலர்கள்
இலக்கம் இல்லாத எழிற்பெரும் சேனை எதிர்வரினும்
விலக்கவல்லாள் ஒரு மெல்லிதன் பாதம் விரும்புகவே.

25. பதமலர் வாழ்த்து (பிரதிபந்த நாசன யோகம்)

தஞ்சம் உன் பாதம் சரணா கதிஎன்று சார்ந்தவர்மேல்
வஞ்சனை பில்லி கொடிதேவல் சூனியம் வைத்தவரை
நெஞ்சம் பிளந்து நிணக்குடல் வாங்கி நெருப்பினிலிட்(டு)
அஞ்சக் கரங்கொண் டறுப்பாள் திரிபுரை ஆனந்தியே.

26. படைநேமி வாழ்த்து (சித்தனானந்த யோகம்)

அலைபட்டு நெஞ்சம் அலைந்துயிர் சோர அலகைக் கையால்
கொலைபட் டுடலம் கழுகுகள் சூழக் குருதி பொங்கித்
தலைகெட்டவயவம் வேறாய்ப் பதைப்புற்றுச் சாவர்கண்டீர்
நிலைபெற்ற நேமிப் படையாள் தனைநினை யாதவரே

27. அடியார் வாழ்த்து (அர்ச்சனானந்த யோகம்)

சிந்தை தெளிந்துனை வாழ்த்திப் பணிந்து தினம்துதித்தே
அந்தி பகல் உன்னை அர்ச்சித்தபேரை அசிங்கியமாய்
நிந்தனை பண்ணி மதியாத உலுத்தர் நிணம் அருந்திப்
புந்தி மகிழ்ந்து வருவாய் வாராஹிநற் பொற்கொடியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. திருப்படை வந்தனம் (அம்ருதானந்த யோகம்)

பொருப்புக்கு மாறுசெய் ஆழியும் தோடும் பொருப்பைவென்ற
மருப்புக்கு நேர்சொலும் கொங்கையும் மேனியும் வாழ்த்தும் எனது
இருப்புக் கடிய மனதிற் குடிகொண்டு எதிர்த்தவரை
நெருப்புக் குவால் எனக் கொல்வாய் வாராஹி என் நிர்க்குணியே

29. பதமலர் வந்தனம் (கைவல்யானந்த யோகம்)

தேறிட்ட நின்மலர்ப் பாதார விந்தத்தைச் சிந்தை செய்து
நீறிட் டவர்க்கு வினைவரு மோ? நின் அடியவர்பால்
மாறிட் டவர்தமை வாள் ஆயுதம் கொண்டு வாட்டிஇரு
கூறிட் டெறிய வருவாய் வாராஹி குலதெய்வமே.

30. சித்தி வந்தனம் (ஆனந்த யோகம்)

நரிபரி ஆக்கிய சம்புவின் பாகத்தை நண்ணியமான்
அரி அயன் போற்றும் அபிராமி தன் அடியார்க்கு முன்னே
ஸரியாக நின்று தருக்கம் செய் மூடர் தலையைவெட்டி
எரியாய் எரித்து விடுவாள் வாராஹி எனும் தெய்வமே.

31. நவகோண வந்தனம் (நித்யானந்த யோகம்)

வீற்றிருப்பாள்நவ கோணத்திலே நம்மை வேண்டும் என்று
காத்திருப்பாள்கலி வந்தணுகாமல் என் கண்கலக்கம்
பார்த்திருப்பாள் அல்லள் எங்கே என்றங்குச பாசம் கையில்
கோத்திருப்பாள் இவளே என்னை ஆளும் குலதெய்வமே.

32. நிறைமங்கலம் (சிவஞான யோகம்)

சிவஞான போதகி செங்கைக் கபாலி திகம்பரிநல்
தவம் ஆரும் மெய்யன்பர்க் கேஇடர் சூழும் தரியலரை
அவமானம் செய்யக் கணங்களை ஏவும்அகோரி இங்கு
நலமாக வந்தெனைக் காக்கும் திரிபுர நாயகியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கம்பர் அருளிய
சரஸ்வதி அந்தாதி

காப்பு

ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை - தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலித்துறை

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கமலா சனத்தேவி செஞ்சொற்
றார்தந்த வென்மனத் தாமரையாட்டி சரோருக மேற்
பார்தந்த நாத னிசைதந்த வாரணப் பங்கயத்தாள்
வார்தந்த சோதி யம்போருகத் தாளை வணங்குதுமே. 1

வணங்குஞ் சிலைநுதலுங் கழைத்தோளும் வனமுலை மேற்
சுணங்கும் புதிய நிலவெழு மேனியுந் தோட்டுடனே
பிணங்குங் கருந்தடங் கண்களு நோக்கிப் பிரமனன்பால்
உணங்குந் திருமுன் றிலாய் மறைநான்கு முரைப்பவளே. 2

உரைப்பா ருரைக்குங் கலைகளெல்லா மெண்ணி லுன்னையன்றித்
தரைப்பா லொருவர் தரவல்ல ரோதண் டரளமுலை
வரைப்பா லமுதுதந் திங்கெனை வாழ்வித்த மாமயிலே
விரைப்பா சடைமலர் வெண்டா மரைப்பதி மெல்லியலே. 3

இயலா னதுகொண்டு நின்றிரு நாமங்க ளேத்துதற்கு
முயலா மையாற்றடு மாறுகின்றே னிந்த மூவுலகும்
செயலா லமைத்த கலைமகளே நின்றிரு வருளுக்கு
அயலா விடாம லடியேனையு முவந் தாண்டருளே. 4

அருக்கோ தயத்தினும் சந்திரோ தயமொத் தழகெறிக்கும்
திருக்கோல நாயகி செந்தமிழ்ப் பாவை திசைமுகத்தான்
இருக்கோ துநாதனுந் தானுமெப் போதுமினி திருக்கு
மருக்கோல நாண்மல ராளென்னை யாளு மடமயிலே. 5

மயிலே மடப்பிடியே கொடியே யிளமான் பிணையே
குயிலே பசுங்கிளியே யன்னமே மனக்கூ ரிருட்கோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலே நிலவெழு மேனிமின் னேயினி வேறுதவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவே னுனதுபொற் பாதங்களே. 6

பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியுந் தந்தருள் பாரதிவெள் ளிதழ்ப்பூஞ்
சீதாம் புயத்தி லிருப்பா ளிருப்பவென் சிந்தையுள்ளே
ஏதாம் புவியிற் பெறலரி தாவதெனக் கினியே. 7

இனிநா னுணர்வ தெண்ணெண் கலையாளை இலகுதொண்டைக்
கனிநாணுஞ் செவ்விதழ் வெண்ணிறத் தாளைக் கமலவயன்
றனிநாயகியை யகிலாண்ட மும்பெற்ற தாயைமணப்
பனிநாண் மலருறை பூவையை யாரணப் பாவையையே. 8

பாவுந் தொடையும் பதங்களும் சீரும் பலவிதமா
மேவுங் கலைகள் விதிப்பா ளிடம்விதியின் முதிய
நாவும் பகர்ந்ததொல் வேதங்க ணான்கு நறுங்கமலப்
பூவுந் திருப்பதம் பூவா லணிபவர் புந்தியுமே. 9

புந்தியிற் கூரிரு ணீக்கும்புதிய மதிய மென்கோ
வந்தியிற் றோன்றிய தீபமென்கோ நல்லரு மறையோர்
சந்தியிற் றோன்றுந் தபனனென் கோமணித்தா மமென்கோ
உந்தியிற் றோன்றும் பிரான்புயந் தோயு மொருத்தியையே. 10

ஒருத்தியை யன்றுமி லாவென் மனத்தினு வந்துதன்னை
இருத்தியை வெண்கமலத் திப்பாளை யெண்ணெண் கலைதோய்
கருத்தியை யைம்புலனுங் கலங்காமற் கருத்தை யெல்லாம்
திருத்தியை யான்மற வேன்றிசை நான்முகன் தேவியையே. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவருந் தெய்வப் பெருமானு நான்மறை செப்புகின்ற
மூவருந் தானவரா கியுள் ளோருமுனி வரரும்
யாவரு மேனையவெல் லாவுயிரு மிதழ் வெளுத்த
பூவரு மாதினருள் கொண்டுஞா னம்புரி கின்றதே. 12

புரிகின்ற சிந்தையி னூடே புகுந்துபுகுந் திருளை
அரிகின்ற தாய்கின்ற வெல்லா வறிவினரும் பொருளைத்
தெரிகின்ற வின்பங் கனிந்தூறி நெஞ்சந்தெ ளிந்துமுற்ற
விரிகின்ற தெண்ணெண் கலைமா னுணர்த்திய வேதமுமே. 13

வேதமும் வேதத்தி னந்தமு மந்தத்தின் மெய்ப்பொருளாம்
பேதமும் பேதத்தின் மார்க்கமு மார்க்கப் பிணக்கறுக்கும்
போதமும் போதவுரு வாகியெங் கும்பொதிந் தவிந்து
நாதமு நாதவண் டார்க்கும்வெண் டாமரை நாயகியே. 14

நாயக மான மலரக மாவதுஞான வின்பச்
சேயக மான மலரக மாவதுந் தீவினையா
லேயக மாறி விடுமக மாவது மெவ்வுயிர்க்குந்
தாயக மாவதுந் தாதார்சு வேதச ரோருகமே. 15

சரோருக மேதிருக் கோயிலுங் கைகளுந் தாளிணையும்
உரோரு கமுந்திரு வல்குலு நாபியுமோங் கிருள்போற்
சிரோருகஞ் சூழ்ந்த வதனமு நாட்டமுஞ் சேயிதழும்
ஒரோருக மீரரை மாத்திரை யானவுரை மகட்கே. 16

கருந்தா மரைமலர் கட்டாமரை மலர்கா மருதாள்
அருந்தா மரைமலர் செந்தாமரை மலரா லயமாத்
தருந்தா மரைமலர் வெண்டாமரை மலர்தாவி லெழிற்
பெருந்தா மரைமணக்குங் கலைக்கூட்டப் பிணைதனக்கே. 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கே துணிபொரு ளென்னுந் தொல்வேதஞ் சதுர்முகத்தோன்
எனக்கே சமைந்த வபிடேக மென்னு மிமையவர்தா
மனக்கேத மாற்றுமருந் தென்ப சூடுமலரென் பன்யான்
கனக்கேச பந்திக் கலைமங்கை பாத கமலங்களே. 18

கமலந்தனி லிருப்பாள் விருப்போ டங்கரங் குவித்துக்
கமலங்கடவுளர் போற்றுமென் பூவை கண்ணிற் கருணைக்
கமலந்தனைக் கொண்டுகண் டொருகாற் றங்கருத்துள் வைப்பார்
கமலங் கழிக்குங் கலைமங்கை யாரணி காரணியே. 19

காரணன் பாகமுஞ் சென்னியுஞ் சேர்தரு கன்னியரும்
நாரண னாக மகலாத் திருவுமொர் நான்மருப்பு
வாரணன் தேவியு மற்றுள்ள தெய்வ மடந்தையரும்
ஆரணப் பாவை பணித்தகுற் றேவ லடியவரே. 20

அடிவேத நாறுஞ் சிறப்பார்ந்த வேத மனைத்தினுக்கு
முடிவே தவளமுளரி மின்னே முடியா விரத்தின
வடிவே மகிழ்ந்து பணிவார் தமது மயலிரவின்
விடிவே யறிந்தென்னை யாள்வார் தலந்தனில் வேறிலையே. 21

வேறிலை யென்று னடியாரிற் கூடி விளங்குநின்பேர்
கூறிலை யானுங் குறித்துநின்றே னைம்புலக் குறும்பர்
மாறிலை கள்வர் மயக்காம னின்மலர்த்தா ணெறியிற்
சேறிலை யீந்தருள் வெண்டா மரைமலர்ச் சேயிழையே. 22

சேதிக்க லாந்தர்க்க மார்க்கங்க ளெவ்வெவர் சிந்தனையும்
சோதிக்க லாமுறப் போதிக்க லாம்சொன்ன தேதுணிந்து
சாதிக்க லாமிகப் பேதிக்க லாமுத்திதா னெய்தலா
மாதிக்க லாமயில் வல்லிபொற் றாளை யடைந்தவரே. 23

அடையாள நாண்மல ரங்கையி லேடு மணிவடமும்
உடையாளை நுண்ணிடை யன்று மிலாளை யுபநிடதப்
படையாளை யெவ்வுயிரும் படைப்பாளைப் பதுமநறும்
தொடையாளை யல்லது மற்றினி யாரைத் தொழுவதுவே. 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுவார் வலம்வருவார் துதிப்பார் தந்தொழின் மறந்து
விழுவா ரருமறைமெய் தெரிவா ரின்பமெய் புளகித்
தழுவா ரினுங்கண்ணீர் மல்குவா ரென்கணாவ தென்னை
வழுவாத செஞ்சொற் கலைமங்கை பாலன்பு வத்தவரே. 25

வைக்கும் பொருளு மில்வாழ்க்கைப் பொருளுமற் றெப்பொருளும்
பொய்க்கும் பொருளன்றி நீடும் பொருளல்ல பூதலத்தின்
மெய்க்கும் பொருளு மழியாப் பொருளும் விழுப்பொருளும்
உய்க்கும் பொருளுங் கலைமா னுணர்த்து முரைப்பொருளே. 26

பொருளா லிரண்டும் பெறலாகு மென்றபொருள் பொருளோ
மருளாத சொற்கலை வான்பொருளோ பொருள் வந்துவந்தித்
தருளாய் விளங்கு மவர்க் கொளியா யறியாதவருக்
கிருளாய் விளங்கு நலங்கிளர் மேனியிலங் கிழையே. 27

இலங்குந் திருமுக மெய்யிற் புளகமெழுங் கண்கணீர்
மலங்கும் பழுதற்ற வாக்கும் பலிக்கு மனமிகவே
துலங்கு முறுவல் செயக் களிகூருஞ் சுழல்புனல்போல்
கலங்கும் பொழுது தெளியுஞ் சொன்மானைக் கருதினர்க்கே. 28

கரியா ரளகமுங் கண்ணுங் கதிர்முலைக் கண்ணுஞ்செய்ய
சரியார் கரமும் பதமு மிதமுந்தவள நறும்
புரியார்ந்த தாமரையுந் திருமேனி யும்பூண் பனவும்
பிரியா தென்னெஞ்சினு நாவினு நிற்கும் பெருந்திருவே. 29

பெருந்திருவுஞ் சயமங் கையுமாகி யென்பேதை நெஞ்சில்
இருந்தருளுஞ் செஞ்சொல் வஞ்சியைப் போற்றிலெல்லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானந்தரு மின்பவேதப் பொருளுந் தருந்
திருந்திய செல்வந்தரு மழியாப் பெருஞ் சீர்தருமே. 30

சரஸ்வதியந்தாதி முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மை

திருவூஞ்சல்

அராலியூர் ம. அமரசிங்கப்புலவர்

காப்பு

சீர்பூத்த தென்னிலங்கை தன்னில் மேவும்
திரைபூத்த கடநயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழால் ஊஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலி யரனா ரீன்ற
அருள்பூத்த லறிவிச்சை தொலென் றோதும்
கார்பூத்த மும்மைமத களிற்றின் பாதம்
கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வோம் 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலனோங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலனோங்கு வெண்டரளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனோங்கு மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
நலனோங்கு திருநயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல். 2

உவகையொடு மலரயன் மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலிட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங் காட்ட
தாழ்ந்துகண நாதர்புகழ் மாலை சூட்ட
அவரிடப துவசமகள் வாணந் தூர்ப்ப
அனந்தன்முதலூர கர்செய செயவென் றார்ப்ப
நவையறுசீர் நயினை நகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல். 3

கொம்பினொடு துடிமுரசு முழவ மோங்க
குடைகளுட னாலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர்வேதம் கீதம் பாட
தொண்டரக மகிழ்தசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனி ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல். 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னநடை யயிராணி கவிதை தாங்க
அயிலைநிகர் விழியரம்பை ஆசி யேந்த
வன்னமுலை யுருவ சிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிமண்டலங்கைக் கொள்ள
மின்னிடமே னகைவெளிலை பாகு நல்க
வியந்திலோத் தகை விசித நடனஞ் செய
நன்னயஞ்சேர் நயினை நகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல். 5

மதிமுகமா லினிபணிபணிநீர் வாசந் தூவ
மயிலைநிகர் சுகேசமல ரடிக ணீவ
விதிமுறைமங் கலைமுதலோ ராலஞ் சாற்ற
வேதியர்தம் மகளிர்சுப வசனஞ் சாற்ற
அதிவினைய மொடுசுமனை யாடி காட்ட
அன்பினநிந் திதைசுகந்த வருக்க நீட்ட
நிதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல். 6

கோலமுறு வைமணிச்சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மாதணி யாட
வயங்குவளை தொடியுடனங் கமுதமாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்புமாட
தண்டையோடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுக மெனவிளங் நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல். 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்துதவ மாதர்துதி கூறி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தளையோ ருரகமட மாதராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
தந்துதவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல். 8

ஆரணியே யம்பிகையே யாடீ ரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீ ரூஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீ ரூஞ்சல்
புராதனியே புரந்தகியே யாடீ ரூஞ்சல்
காரணியே காருணியே யாடீ ரூஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீ ரூஞ்சல்
நாரணியே நாயகியே யாடீ ரூஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல். 9

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில் பல சத்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய் போற்றி
தனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல். 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா கமமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசமய மும்மறமும் தழைத்து வாழி
பாவார்வெண் ணீறுபஞ்சாட்சரமும் வாழி
பாடியவூஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியே யாடீரூஞ்சல். 11

இக்காலத்தில் பாடப்படும் பாடல்

சீர்வாழி சிவசமயம் வாழி வாழி
தேவாதி தேவுமெல்லாத் தேவும் வாழி
பார்வாழி மதிதொறுமும் மாரி வாழி
பசுக்குலம் வேதியர் தருமம் பலவும் வாழி
நீர்வாழி நயினை நகருறைவோர் வாழி
நீடாயுளன்ன சொர்ணம் நிறைந்து வாழி
ஏர் வாழி இராமச்சந்திர மகிபன் வாழி
இனம்வாழி இவ்வூஞ்சல் வாழி மாதோ 12

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்தடிகள் தன் தாயாருக்குத் தகனக்கிரியை செய்கையிற் பாடியது

(ஸ்ரீ சாமிநாத தேசிகேந்திர சிவயோகி உரை)

பாடல் - 1 :

ஐயிரண்டு திங்களா அங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி.

பொழிப்புரை : பத்து மாதங்கள்வரை சுமந்து தேகாதியந்தமும் நலிந்து வருந்திப் பெற்று, ஆண்பிள்ளை என்ற மாத்திரத்திலே தன்வலி வருத்தம் யாவுமொழிந்து மனக்களிப்போடும் குழந்தையைச் சிவந்த தன்னிருகைகளிலும் ஏந்தி பொற்கிண்ணமொத்ததன் புணர்முலைப்பாலைப் பருக எனக்கு ஊட்டித் தடவிக் கொடுத்த தாயை இனி, யான் எந்தப்பிறவியிற் காணப்போகிறேன்?

குறிப்புரை : ஐயிரண்டு திங்கள் - பத்துமாதங்கள். திங்கள் - மாதம். கர்ப்பந்தரித்த அந்நாள் முதல் பெறுங்கால பரியந்தமும் (கர்ப்பிணி) என்ற பெயர்க்கிலக்காக தேகாதியந்தமும் சிரமத்திற்குள்ளாகி வருந்துவதியல்பாகலான் நொந்து பெற்று என்றார். ஈன்ற அன்னைக்கு ஆண்மகவு என்றவுடனே அவ்வளவு பிரசவ நலியாலேற்பட்ட துன்பம் போனவழி தெரியாது. குழவியை இருகரங்கொண்டெடுத்து மார்பிடையணிந்து முலையூட்டிக் களிப்பதியல்பு. ஆக-பையலென்றபோதே பரிந்தெடுத்து என்றும் கூறினர். பரிந்து - விரைந்து, இப்பரிவு அந்த நொந்த சரீரத்திற்கு எங்ஙன முண்டாம் என்றவிடத்து ஆண் மகவென்ற சப்தம் காதில் நுழையக் களிப்புண்டாக அதனின்றுந் தோன்றியதாகும் என்றுணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 2 :

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபகலாய்ச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

பொழிப்புரை : முன்னரே இராப்பகலாகச் சிவபரஞ்சுடரைப் பக்திவிரத மூலமாகத் தவமியற்றி பத்து மாதங்களாகச் சுமந்து வருந்தி வயிறு முன்சரிந்து தோன்ற அக்கர்ப்பத்திற்கு யாதானும் துன்பமுண்டாகாது காத்துவந்த என் அரியமாதாவுக்கோ எரியும்படி அக்கினிப் பிரயோகஞ் செய்வேன்! செய்யேனென்றபடி.

குறிப்புரை : பிள்ளைப் பெருந்தகையார் தன்னியல் உணர்ந்தாராய், தன் தாயார் முன்னம் எத்தகைய விரதம், பக்தி தவங்கள் புரிந்திருப்பாளோ என்றெண்ணியே "முந்தித்தவங்கிடந்து" என்றருளினர் என்க. ஒருநாள் இருநாளல்லாது முந்நூறு நாளாதலால் அவ்வளவு காலசிரமத்தையும் வகித்த அருமையைப் பாராட்டிக் கூறலாயினர் என்பதாம். தவச்சீலரைப் பெற்ற பிதாமாதாக்கள் தவமுஞற்றியுள்ளரோ என ஐயுற வேண்டா; "மகன் தந்தைக் காற்றுமுதவி" என்பதாதியாய குறட்பாவின் கருத்தை நம் பெருந்தகையாளர் மெயப்பித்தமை ஈண்டு காண்க.

பாடல் - 3 :

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்.

பொழிப்புரை : ஏணைத்துணியினும், மரத்தொட்டிலினும், தன் மார்பகத்தும், தோள்மேலும் வைத்தும், கட்டிலிலிட்டும் விருப்பமுற்று, மற்றும் இடுப்பின்கண்ணும் வைத்துக் காத்து, வளர்த்து வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றாயையோ நான் கட்டையிற் கிடத்திக் கனல் மூட்டுவேன்? அங்ஙனஞ் செய்யேன்.

குறிப்புரை : முன்னங் கர்ப்பத்திற் சுமந்தது போதாதென்று பிறந்த பின்னரும் நடைபயிலுங்காறும் சுமத்தலைக் குறித்துச் சலிப்புறாமையை உணர்ந்து வருந்தியே "முட்டச் சிறகிலிட்டுக் காப்பாற்றி" என்றெடுத்து ஓதினார். இவ்வரியபாசுரம் இவ்வுலகிற் பிறங்கியும், சில பெரும்பேயர் தாயரைத் தடியாலடித்தலும் செய்கின்றனர்! அந்தோ! இம்மாபாவியரை அறக்கடவுள் என் செய்வரோ?

பாடல் - 4 :

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்துவளர்த் தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீ மூட்டு வேன்.

பொழிப்புரை : மிக்க கஷ்டத்தோடு பத்து மாத காலம் வயிற்றில் சுமந்து தேகம் அலங்காமலும், நலுங்காமலும் இருகையிலும் ஏந்திப் பாலூட்டிக் காத்து வளர்த்து இரவும்பகலும் தன் கரதல கமலத்தில் ஏந்தி ஈ, எறும்பு கடித்தற்கஞ்சித் தன் சரீரத்தில் ஒட்டி வைத்த, நற்றாய் தன் சரீரத்திலோ தீக்கொளுத்துவேன்!

குறிப்புரை : பெற்ற தன் குழவியை வளர்த்தலில் தாய்க்குரிய கவலை கஷ்டங்களில் நூற்றிலொரு கூறும் பிதாவுக்கு இராதென்பது விகசிதம். அது கொண்டே அந்நாள் அன்னையான ஔவையாரும் மந்திரமாய் "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்றருளிச் செய்தார். அன்னையையே முன்னங்கூறினமையும் ஆய்ந்துணரற் பாற்று, ஏன்? அவ்வளவுக்கும் தன்தேக சிரமங் கருதாது, குழந்தையைக் காத்தலிலே கருத்துள்ளமையும், கஷ்டத்தை விகத்தலினும் அவ்வாறாயே மனம் பதைத்தலும், அவ்வன்னைக்கே ஆகலான் ஈண்டு அத்தகைய தாய்க்கோ "மெய்யிலோ தீ மூட்டுவேன்" என்றார் பெருந்தகைப் பிள்ளையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் - 5 :

அரிசியோ நானிடுவே னாத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியமே
மானே என அழைத்த வாய்க்கு.

பொழிப்புரை : (பாலுக்கழற் கண்டுஞ் சகியாது பரிதவிக்கும் பரமதாய்க்குப் பலவாறான) வரிசை செய்துமனமகிழாது, இனிய சுவைத் தேனே! அமிர்தமே! தேடக்கிடையாத் திரவியமே! தெள்ளமுதே! என்றென்னை அகங்கனிந்து அழைத்த அவ்வாய்க்கோ நான் அரிசியிடுவது! மேலான "நன்னிலையில் நிறுத்வேன்" என்றபடி.

குறிப்புரை : என்னை இராப்பகல் எந்நேரமும் தன்னிடம் வைத்துக் காத்த அருமந்த தாய்க்கு அரிசியோ பெரிதாய் நானிடுவது? அன்று! என்றபடி.

பாடல் - 6 :

அள்ளியிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதலை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனவழைத்த வாய்க்கு.

பொழிப்புரை : யான்குழவியாயுள்ளபோது எனது முகத்தின் மேலே தன்முகத்தை மெதுவாக வைத்து முத்தமிட்டு என்னரிய மகனே! என்று அருமையோடும் கொஞ்சி அழைத்திட்ட வாயிலே அரிசியையோ இடுவேன்! அன்றி அவ்வருமந்தத் தாயின் தலையில் கொஞ்சமும் அஞ்சாது கொள்ளியையேனும் இடுவதா?

குறிப்புரை : மிக்க சிரமத்துடனே ஈன்று பல அருமை மொழிகள் கூறி அழைத்திட்டு ஈ, எறும்போட்டி பேய், பிசாசு வெருட்டற்கும் காத்து வளர்த்து வந்த அருமந்தத் தாய்க்கு நான் அதன் பரிசிரமத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி பாராட்டிக் காத்துச் சுகப்படச் செய்யாது அரிசியும் கொள்ளியும் வைக்கவேண்டுமா? என்று மனம் நொந்தனர் போலும்.

கலிவிருத்தம்

பாடல் - 7 :

முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையில்
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே.

பொழிப்புரை : பண்டையோர் காலத்திலே திரிபுரத்தின்கண் சிவபெருமானார் கொளுவிய சுடரானது மூண்டெரிந்தது. பின்னோர் போதும் அனுமார் கொளுவிய அக்னியானது தென்னிலங்கையைச் சுட்டெரித்தது. இன்றென்தாய் இறக்க என் அடிவயிறு எரிகிறது. இதுபோலவே யான் வைத்துள்ள தீயும் மூண்டெரிவதாக.

குறிப்புரை : ஊரவர் வழக்கம்போல் நம் அன்னையரையும் விறகிலிட்டோ கொளுத்துவது என்று குளிர்ச்சி வாய்ந்த வாழை மட்டையிலிட்டு எரித்தற்காகவே இப்பாசுரத்தினை நம்பிள்ளைப் பெருந்தகையாளர் திருவாய் மலர்ந்தருளினர். தன் நற்றாய்ப்பிரிவைச் சகிக்கலாற்றாராய் 'அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே" என்றனர்.

வெண்பா

பாடல் - 8 :

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்புரை : நங்குழவிக்கு எங்கு பக்ஷிதோஷம் தாக்கிவிடுமோ என்றையுற்ற தாய் ஆகாயத்தில் பக்ஷி பறவாத சமயம் வெளிக் கொணர்ந்து காத்து வளர்த்த தாயின் இருகரங்களும் அக்கினி பற்றியெரிகிறதே! அக்கைகள் வெந்து தணிந்துசாம்பாராகின்றவே! அந்தோ! பாவியேன் என்செய்கேன்!

குறிப்புரை : ஆகாயமளாவிப் பறக்கும் சில பக்ஷிகளின் சாயை குழந்தைகள் மேல் படுதலாகாது, ஏன்? அப்பஷியால் தோஷங்கள் தாக்கி குழந்தைகள் நாளடைவில் மெலிவுற்று வருந்தியழும், நம் பெருந்தகைப் பிள்ளையார் அஃதுணர்ந்தா ராகையால் அதனை ஈண்டு 'மாகக் குருவி பறவாமல்' என்று குறிக்கொண்டு பாடியருளினரென்க. (மாகம் - ஆகாயம்) தாய் பலமுறையுங் கருத்து கொண்டெடுத்து வளர்த்த கைகளிரண்டும் தீப்பிடித்து வேகிறதை யான் பார்த்திருத்தலும் தகுதியோ? இதுவோ நான் அக்கரங்கட்குச் செய்யும் கைம்மாறு! அந்தோ! என்றிரங்கினராக.

பாடல் - 9 :

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரங்கிடந்துஎன்
தன்னையே ஈன்றெடுத்த தாய்.

பொழிப்புரை : அண்ணாமலை மேவிய பரஞ்சோதியே! எக்காலமும் தேவரீர் திருப்பாதங்களையே சாந்நித்தியத் துணையாகக் கொண்டு அன்பு பாராட்டி வரம்வேண்டி இவ்அடிமையைப் பெற்று வளர்த்த அரிய பெரிய அன்னையார் அக்னியில் வெந்து போயினளோ! தேவரீரது திவ்ய திருவடித் தாமரையை அடைந்தனளோ! என்னையும் மறந்தனள்போலும். என்செய்வாம்!

குறிப்புரை : பெருந்தகைப் பிள்ளையார் பிரிவாற்றாமையை நோக்க, அந்நாள் தவமிழைத்ததையும் பின்னாள் சரீரமுழைத்ததையுங் கண்டும் கேட்டுமுள்ளாராதலின் பிரிவாற்றாமைக் கேதுவாயின புலப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவிய காலத்து தன்னைச் சதாநினைவில் கொண்டிருந்தமையால் இப்போது "என்னை மறந்தாளோ" என்றருளினர் போலும். ஐயனது பதாம்புயமடைந்த அக்கணமே தன்னை மறக்கக் கூடுமாதலால் அதனை முன்னம் கூறி மறத்தலைப் பின்னே கூறினர் என்க. சோணகிரி - அக்னிமலை. அதாவது திருஅண்ணாமலை.

பாடல் - 10 :

வீற்றிருந்தா ளன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தாளின்று வெந்துநீறானாள் – பாற்றெளிக்க
எல்லீரும்வாருங்க ளேதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம்.

பொழிப்புரை : அன்னையார் மிக்க சரீரதிடமா யிருந்தனள், தெருவிலும் வரப்போக இருந்தனள், நேற்றைய தினம் ஜீவ தசையோடு மிருந்தவள் இன்று அக்னியால் தகனஞ் செய்யப் பெற்றுச் சாம்பராயினள். ஆதலால், பால்தெளிக்க நாளைய தினம் அனைவரும் வந்து சேர்வீர்களாக. ஏதோ என்னவொ என்று இரங்கி நின்றுவிடாதீர்கள். யாவுஞ் சிவமயமே யாகும்! சர்வம் சிவாக்கினை என்றபடி.

குறிப்புரை : அன்னையார் நேற்று ஜீவியமாய் நன்றாகக் காணப்பட்டாள். அந்தோ! இன்றிறந்தனளே என்பது உலகி யற்கையே, அதனாற் சலித்தல் ஒழிக, (எவையும் "சிவன் செயலாலே வருமெனத் தேறல்" ஞானியரியல்பு.)

மாதாவுடல் சலித்தாள் வல்லினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே! – நாதா
இருப்பையூர் வாழ்சிவனே இன்னுமோர் அன்னை
கருப்பையூர் வாராமற் கா.

– பட்டினத்தடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்தடிகள் அருளிய

உடற்கூற்று வண்ணம்

தனதனதான தனதனதான
 தந்ததனந்தன தந்ததனந்த
தனனதனந்த தனனதனந்த
 தானனதானன தானனதந்த
தந்ததனதான தனதானனா.

ஒருமடமாதும் ஒருவனுமாகி இன்பசுகந்தரும்
அன்புபொருந்தி உணர்வுகலங்க ஒழுகியவிந்து
ஊறுசுரோணித மீது கலந்து - 1

பொழிப்புரை : பேதைமையுள்ள ஓர் தலைமகளும் ஓர் தலைவனுமாகத் தனித்தவர்களாய், இனிய சுகானுபவத்திற்கேதுவான அன்புவசப் பட்டவர்களாய்ப் பொருந்தி அறிவு மயங்கியபடி. தலைமகன் மூலம் வெளியான சுக்கிலமானது தலைவிபால்வெளிவந்த சுரோணிதத்தோடுங் கலந்து,

குறிப்புரை : பெண்களுக்குரிய நால்வகைக் குணங்களுள் ஒன்றாய மடமை உடையாள் 'ஒருமடமாது'. தலைவி, தலைவன் ஆக இருபவர்பாலும் அன்பானது ஏக காலத்தோற்றத்தான் மனம் ஒருமையுற்று பொருந்துங்காலே இன்பம் காணப் பெறுமாதலின் 'இன்பசுகந்தரும் அன்புபொருந்தி' எனக் குறிப்பாய் உணர்த்தப்பட்டமை அறிக. இருபாலர்க்கும் விஷயாதியால் விந்து நாதம் வெளியாகும்போது ஓர் அரியநூதனமாய இன்போதயமாய் அறிவும் மயங்குதறுதல் சுபாவமாதலால் "உணர்வுகலங்கி" என்றனர். ஈண்டு சுக்கில சுரோணிதம் இரண்டும் ஒரே சமயமானால்தான் புத்திரோற்பத்திக்கு ஆதாரமாகும், முன்பின்னாயின் குருஅமைவுறாதென்க. இன்னும் ஆண்மகன் விந்துவும் பெண்மகள் சுரோணிதமும் கலந்தால்தான் கருக்கூடிழுத்துக் கர்ப்போற்பத்தியைப் பெறுமென்க. ஆதலாற்றான் "கலத்தல்" என்பதைக் குறிப்பிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனியிலொர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து புகுந்து
திரண்டு பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற - 2

பொழிப்புரை : தலைவிதலைவன்பால் வெளியாகிய சுக்ல, சுரோணிதத்துள் கலப்புற்று அதில் பனித்தளியில் பாதியளவு திவலைமட்டும் தலைவியின்பால்கலந்து தாமரை மொட்டை ஒத்தும் பிறகு ஆமை வடிவைப் போன்றும் விரிவாகிகண், காது, மூக்கு, கால், கை இவையெல்லாம் சிறிது சிறிதாகப் பிரிந்து எனக் கூறியுள்ளது.

குறிப்புரை : கருக்கூடடைவது "அருகுநுனி பனித்துளி" என்று அருணகிரிநாதரும் திருப்புகழில் வெளியிட்டதும் காண்க. அவயவாதிகள் தோன்றற்குமுன்னே உருவ உருண்டையாயிருந்தது, சப்பட்டையாய் ஆமை அம்ஸமாகக் காணுவதாலேயே கமடமாகிய ஆமையை ஈண்டு கூறினா் மீண்டும் என்பாம். இவ்வுருவிலிரந்து இனி அங்கங்கள் பிரிவாகும்.

உருவமுமாகி உயிர்வளர்மாத மொன்பதுமொன்றுநி
றைந்துமடந்தை உதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து - 3

பொழிப்புரை : சிசுரூபம் பூர்த்தியாகிப் பத்து மாதங்களும் சரிவர முடிந்துவரலும் தலைவி வேதனையால் சிசு பூமியிலே பிறந்து விழவும், மற்ற உற்றார்அக்குழந்தைக்கு நாள் நட்ஷத்திர கணிதங்களைக் குறித்து ஆராய்வார்கள்.

குறிப்புரை : வயிறுபெருத்து மேல் பிரசவமாதலின் 'உதரமகன்று' என்றனர். இதன்மேல் நாள் நட்ஷத்திராதிகளை ஆராய்வார்கள், அதனையே 'யோக வார நாளறிந்து' என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர்கள்சேனை தரவணையாடை மண்படவுந்தியு
தைந்து கவிழ்ந்து மடமயில் கொங்கை அமுதமருந்தி
ஓரறிவு ஈரறி வாகிவளர்ந்து. - 4

பொழிப்புரை : இதன்மேல் பெண்வகையறாக்கள் குழந்தையை ஏணையிலிட்டுத் தாலாட்டுவா; குழந்தை ஓர் சமயம் பூமியிலே தவிழ்ந்து நகர்ந்து மயிற்சாயலுள்ள தன் தாயின் பாலருந்தி நாளடைவில் ஓரறிவு ஈரறிவாக வளர்ந்து,

குறிப்புரை : தலைவியின் சேனை - தாயின் வகையறாக்கள், ஏணைத்துணியை அணையாடையென்றார். பூமியிற் படுத்து புழுதிபட நகர்தலையே 'மண்படஉந்தி உதைந்து' தவழ்ந்தென்பாராயினார். உந்துதலை இயல்பாய் உடையதானதால் அதனை மதலைக் குணமாய்க் கூறினர் போலும். நாளடைவில் ஓரறிவு ஈரறிவாய் வளரும் தன்மையாய்ச் சில வருடங்களில் தான் ஆறு அறிவும் நிறையப் பெறுதல் சுபாவமென்க. பகுத்தறிவு ஒன்றும் சேர்ந்து ஆறறிவாயது. இதுவும் கல்வியறிவு, உலக அறிவு இவைகள் உண்டாய பின்னரே யென்க. சிசு ஐயறிவுடையதே.

ஒளிநகையூற லிதழ்மடவாரு முவந்து முகந்திட
வந்து தவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப. - 5

பொழிப்புரை : குழந்தையின் ஒள்ளிய பற்களையும், மிருதுவாய்ச் சிவந்த கீழுதட்டையும் தாய் முதலானவர்கள் ஆசையோடும் பார்த்து முத்தஞ்செய்ய, பின்னும் அவரவர்பால் சிசு தவழ்ந்தோடித் தன் தாயின் மடியேறிக் குதலைவார்த்தை குலவி, வா எனவும், போ எனவும், வார்த்தைகள் கொஞ்சிப் பேசியும், அப்பா, அம்மா என்ற பெயர் சொல்லியும் என்ப,

குறிப்புரை : தவழ்தலையுடைய குழந்தையை பல மாதர்கள் ஆசையோடும் எடுத்து முத்தஞ் செய்து உச்சி மோதலும், பிறகு பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிய பலவார்த்தைகள் பேசுதலையும், வார்த்தை பழகுதலையும் இயல்பாக விருத்தியாகின்றது என்பதாய் உணர்க.

உடைமணியாடை அரைவடமாட உண்பவர்
தின்பவர் தங்களொடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து –
அஞ்சுவயதாகி விளையாடியே – 6

பொழிப்புரை : பலமணிமாலைகளும் பட்டுவஸ்திரங்களும் சுவர்ண அரைநாண் பூணும் இடுப்பு அசைந்தசைந்து ஆடுதலும், உண்பார் தின்பாரைப் பார்த்துத் தானும் அப்படி பழகியும், நடுவீதியிற் கிடந்துருண்டு விளையாடியும், புழுதியைக் கையாலளைந்தும் சரீரத்தில் பூசியும், சகல குழந்தைகளோடும் ஓடி விளையாடியும், நடந்து திரிந்து விழுந்தும் புழுதியை யளைந்தும் வாயிற்போட்டும் ஒருவர்க்கொருவர் மேலே போட்டு விளையாடி இவ்வாறு வயது ஐந்தாக.

குறிப்புரை : உடுத்தற்குரிய ஆபரணாதிகளோடு பட்டுத் துகிலணிந்து இடுப்பில் வெண் பொன் செம்பொன்களால் பூட்டிய அரைநாண் அசைந்தாடி, மற்றும் பஷணம் சோறு இவையுண்ணும் குழந்தைகளை நோக்கித் தானும் அவ்வாறே உண்டு தெருவில் விளையாடல் புரிந்து, இதர குழந்தையுடன் ஓடியாடிவந்து இப்படி வயது ஐந்து முடிய.

உயர்தருஞான குருவுபதேச மும்தமிழின்கலை
யும்கரைகண்டு, வளர்பிறையென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து – 7

பொழிப்புரை : உத்தமமான குருவின்பால் ஞானோபதேசமும் தமிழ்க் கல்விக்குரிய சாஸ்திர உபதேசங்கள் பெற்றும், அவ்வாறு நூல் பலகற்றுத் தெளிந்து, பார்ப்போர் வளர்பிறைச் சந்திரனென்று சொல்லுமாறு நாளொரு வண்ணமாய் வளர்ச்சி பெற்று வயது பதினாறு நிரம்ப,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புரை : மேலான மோக்ஷ ஏதுவான ஞானத்தையே ஈண்டு "உயர்தரு ஞானம்" என்றனர். இதன்மேலேயே வித்யாரம்பம் உபதேசிக்கப்பெறுதல் பூர்வகால மேன்மக்கள் வழக்காகும். ஆதலின் அம்முறையை அடிகள் கூறலாயினர் என்க. மற்றும் பல கலாவிநோதாதிகளை எல்லாம் முறையே ஓதி அதன்பால் நிகழும் சந்தேக விபரீதங்களை ஒழித்துத் தெளிந்து உணர்தலையே "கலையும் கரைகண்டு" என்றார் அடிகளார்.

மயிர்முடிகோதி அறுபதநீல வண்டிமிர் தண்தொடை
கொண்டை புனைந்து, மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க - 8

பொழிப்புரை : பிள்ளைக்குத் தலைமயிர் வாரி கொண்டைகட்டி அறுகால் வண்டுகள் மொய்க்கின்ற மலர்மாலை சுற்றி, பொன்மணிப் பூண்கள் பல தரித்து, பார்ப்பவர் பலவாறாக ஒன்றுகூடி வளைந்து நிற்க.

குறிப்புரை : வண்டினங்கட்கு கால் ஆறு ஆதலின் "அறுபத நீலவண்டு" என்றனர், தொடை - புஷ்பமாலை.

மதனசொரூபன் இவனெனமோக மங்கையர்கண்டுமருண்டு
திரண்டு, விரிவிழிகொண்டு சுழியஎறிந்து
மாமயில் போலவர் போவதுகண்டு - 9

பொழிப்புரை : கணிகைமாதர்கள் பார்த்து ஆஹா! இப்பிள்ளையென்ன, காமனையொத்த அழகுவாய்ந் திருக்கின்றானே, என மயக்குற்று, வரிபரந்த நேத்திரங்களால் மருட்டிப்பார்த்து, மயில் போன்று செல்வதுணர்ந்து கண்களிக்க வெறிக்கக் கண்டு,

குறிப்புரை : மதனன் - சொரூபன், ஈண்டு மதனசொரூபனென இடைக்குறைந்து வந்தது, அதாவது காமனையொத்த வனப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்தவன் என்றபடி. தாசிகள் விலைமாதரென்றும், கணிகையரென்றும், பரத்தையரெனவும், பொதுப் பெண்டிரென்றும் கூறப்படுவர். காமக்கிழத்தி எனலுமமையும். அவன் மனங் கவலைச்சுழித்துப் பார்த்தலையே "சுழியளறிந்து" என்றனர். இன்னும் அவன் மயக்குற்றுச் சொக்குவதற்காக மயில்போன்று பையசொகுசாக நடத்தலும் அம்மாதர்க்குரியன என்றனர்.

மனதுபொறாம லவர்பிறகோடி மங்கலசெங்கல
சந்திகழ்கொங்கை, மருவமயங்கி இதழமுதுண்டு
தேடிய மாமுதல் சேரவழங்கி –

பொழிப்புரை : மேற்கூறிய வண்ணத்தான் திடம்பெற அம்மாதரைப் பின்பற்றித் தொடர்ந்துபோய் அவனைப் பார்த்தவளை நெருங்கி பொற்கிண்ணம் போன்ற புணர்முலையைப் பரிசித்துப் பின் அத்தனம்தன் மார்பினிலே அழுந்தும்படியாகக் கட்டித் தழுவிப் புணர்தல் புரிந்து இஷ்டப்படி யெல்லாம் விளையாடி பெருந்தனங்களை அந்நாசகாரிகளுக் கீந்து.

குறிப்புரை : மோகவெறி கொண்டு வெகு அவசரமாக அவன்பால் சுவானம்போல் செல்வதையே 'ஓடி' யென்றனர். மயங்கி கூடி, சங்கமித்தலை என்க. மூலதனத்தையும் தன் தேட்டத்தையும் பொதுப்படவே தேடிய முதற்பொருள்களைச் சேர, என்றது 'தொகையாக' என்ப.

ஒருமுதலாகி முதுபொருளாயி ருந்ததனங்களும்
வம்பிலிழந்து, மதனசுகந்த விதனமிதுஎன்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து – 11

பொழிப்புரை : முன்னோர் நிறுத்திய மூலப் பொருள்களும் இன்னும் இதர பொருள்களுங்கூட்டி அவ்வழியி லழித்துக் காமசுகமறிந்த மறுகணமே கைவறட்சியால் துக்கித்து முன்னைய மேனியுமாறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகாரமாய் நடைப் பிணம்போன்று பார்த்தோர் பலரும் சுகத்தின் கதி இது என்று பரிகசிக்க,

குறிப்புரை : முதுபொருளென்பன பழமையாயுள்ள தாவர சங்கமசொத்துக்களும் நாணயதிரவியங்களும் ஆகும். கணக்கற்று கால நிலை, சரீரநிலை, வயதுநிலை ஆகிய இவைகளைச் சிறிதும் சீர்தூக்காது அளவுகடந்து போகத்தில் மூழ்குபவர்களே பின்னர் மகா துர்ப்பலர்களாய்ப் பல வியாதிகட்குட்பட்டு மேனியும் நுடங்கி ஈற்றில் தேவாங்காவர் என்பதையே அடிகளார் 'மதனசுகந்த விதனம் இது' என்று கூறினர். ஆகவே பால்ய கொண்டாட்டமெல்லாம் யௌவனத் துள்ளேயே விருத்தாப்பியம் வந்து திண்டாட்டமாய்ச் சந்தானமுமற்று விட்டதை நினைந்து நினைந்து வருந்த ஏதுவாய் விடுவதால் 'வாலிபகோலம்' பிரிந்தென்றார்.

வளமையுமாறு இளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு, வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து
செங்கையினி லோர் தடியுமாகியே - 12

பொழிப்புரை : தேககாந்தியும் இளமையும் போய், வலிமையாயுள்ள தந்தங்கள் நழுவி, கண்களின் பிரகாசம் குறைந்து, வயது சென்றதுபோலத் தோற்றி உரோமம் வெளுமையுற்று, தேகம் கொழுமைமாறி திரைந்து வாதநாடி முதலியன தளர்ச்சி அடைந்து செங்கமலம் விரிந்ததன்ன கரத்தில் ஓர்தடியும் பிடிப்பதாசியே.

குறிப்புரை : இங்கே வளமையென்றது திரவியத்தைக் குறித்து நின்றது. திரை - சரீரம் சுருங்கிய குறி 'விந்துவிட்டான் நொந்து கெட்டான்' என்று உலக சமுதாய சனங்களில் சில சமயம் நேர்ந்துழி கூறுவதியற்கை. பலரும் அறிவர். அளவுக்கு மிஞ்சிய அமுதமும் விஷமாகும் என்பதுமொன்று. சிலர் விந்துவை ஜீவரத்னம் என்றும் கூறுவர். ஆகவே, எதைக்கட்ட வேண்டுமோ அதைக்கட்டியும், எதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட வேண்டுமோ அதை விட்டும் செய்யாதவர் கதி அந்நியத்தில் அதோகதிதான் இன்னும்,

மூத்திரத்தி னால்நனைந்த முடை நாற்றயோனிக்குக்
காத்திரத்தை விட்டார் கணக்கில்லை"
என்றார் சிவஞான வள்ளற் பெருமான்

வருவதுபோவ தொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து, மதியுமழிந்து, செவிதிமிர்வந்து
வாயறியாமல் வாடாமல்மொழிந்து - 13

பொழிப்புரை : ஓர் கூன்விழுந்த கிழக்குரங்கு அங்கும் இங்கும் குந்தி குந்தி அலைந்து திரிகின்றது என்று சொல்லவும். அறிவு அழிந்து காதும் அடைபட்டு அடுத்தடுத்துச் சொல்வதையும் அறியலாற்றாது, வாயில் வந்தனவெல்லாம் உளறி,

குறிப்புரை : "மிகுகூனையே" அதிக கூன் என்றனர் போலும். முதுகூன் என்றதைச் சிலர் கூன்முதுகென்று பொருள் கொண்டு விடுவர். அது பொருந்தாது, முதுமை கூன் எனப் பிரித்து காலமுற் பருவத்தைக் குறிக்கும். ஆகவே முதுமையாயுள்ள கூன் என்று வருதலால் அதிக காலத்தையே காட்டும். பழமையாயுள்ள கூனென்றபடி. முதுகு என்பது முது எனக் குறுகியது. (இது பிழை, இவ்வாறு கூறல் மரபு அன்று).

துயில்வருநேரம் இருமல் பொறாது தொண்டையுநெஞ்சும்
உலர்ந்துவறண்டு, துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர் பாலர்கள் கோரணிகொண்டு - 14

பொழிப்புரை : நித்திரை துவக்கத்தில் வரும் இருமல் தாங்க இயலாது தொண்டை, நெஞ்சு உலர்ந்து போய் வரட்சியுற்று இடுப்பின் வஸ்திரம் நழுவிச் சுவாதீனமின்றி, இந்நிலையைப் பார்த்து மக்கள் மனைவியர்கள் மனமிகவருந்த,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புரை : சுரணையையே சுணையென்றார். கோரணி - விகாரத்தோற்றம். குழப்பம் என்பது மனத் தெளிவின்மையேயாம். அன்றிக் கலங்கிப் போதல் என்பாருமுளர்.

கலியுகமீதில் இவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்ச, கலகலவென்று மலசலம்வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து - 15

பொழிப்புரை : இக்கலிகாலத்திலே இவரது நியாயத்தைக் கவனியுங்கள் எனச் சொல்வோர்க்குக் கவலையானது மன்னிலும் மிஞ்ச சலசலவெனவே மலசலாதிகள் வெளிவந்து கால்வழியும் மேல்வழியும் எங்கும் பட ஒழுக்கெடுப்ப,

குறிப்புரை : அதிபூர்வ காலத்தார் ஜீவகாருண்யத்தில் தலைசிறந்து பிறரெய்தும் துயரைக்கண்டு தனக்குற்றதாகக் கருதி அவரை அத்துயரினின்றும் மீட்டுவருதல் இயல்பால் இருந்தது என்பது பலர் சரிதமூலம் வெளியாகின்றது. இக்கலியுகத்திலோ அவ்வாறு கொள்ளாது பிறர்க்குதவி புரியாதே இருக்கட்டும், அதனாற் குறையில்லை, பிறர் யாதானும் ஓர் செயலால் துன்புறும்போது காணும் இக்கலிகாலத்தார் வாய்மதங் கொண்டிழித்துக் கூறி கைகொட்டி நகைப்பதையாவது செய்யாதிருப்பின் அதுவே பேருதவியாகப் பாவிக்கலாம். அவ்வாறுமின்றி "இக்கஷ்டம்போல் இன்னும் பதின்மடங்கான துன்பமெய்தி ஆற்றுவெள்ளமடித்துப் போவது போன்று தொலைந்தால் அல்லோ சரி" என்னும் கண்மணிகளின் கடுஞ்சித்தங் கண்டே "கலியுகமீதிலிவர் மரியாதை" என்றார் நம்பெருந்தகை. இதனால் வயோதிக பரவத்தில் உலகத்தில் இருப்பதைவிட இறந்துபோதலே சுகம் என்பது கருத்தாம்.

தெளிவுமிரா லுரைதடுமாறி சிந்தையுநெஞ்சமும்
உலைந்துமருண்டு, திடமும்உலைந்து மிகவுமலைந்து
தேறிந(ல்)லாதர, வேதென நொந்து - 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்புரை : மனத்தெளிவின்றி வாயுங்குறைவுற்று சிந்தை கெட்டுக் கலங்கி உறுதிப்பாடின்றி மிகத்திண்டாடிப் பின் ஆராய்ச்சி செய்து நமக்கிப்போது உற்றதுணை ஆவார் ஆர் என வருந்தியே.

குறிப்புரை : திடமும் உலைந்து - என்றது மன வலிமை மாறி என்க, ஈதன்றி அலைந்தென்றுங் கூறுதல் வளமை.

மறையவன்வேத னெழுதியவாறு வந்ததுகண்டமும்
என்றுதெளிந்து, இனியெனகண்டம் இனியெனதொந்தம்
ஏதினிவாழ்வுநி லாதினிநின்ற - 17

பொழிப்புரை : வேதாவெனும் பிரமதேவன் முதலில் எழுதியவாறாகவே கண்டாதிகளும் வந்து கொண்டிருக்கின்றன எனத் தேர்ந்து "இனியுங் கண்டமுண்டோ, இனியென்ன தொந்தங்கள் வருமோ? (எல்லாமும் வந்து கொண்டு தானிருக்கின்றனவே) புவனயோகம் நிலைத்ததன்று, அநுபவிக்க வேண்டியதே.

குறிப்புரை : லலாட லிகிதத்தையே வேத னெழுத்தென்றனர். ஆபத் சந்தர்ப்பத்தையே கண்டமென்றனர். தொந்தம் - வினைத் தொடர்பாம், நின்றது - எஞ்சியுள்ள காரியாதிகள்.

கடன்முறைபேசும் எனஉரைநாவு முழங்கிவிழுந்துகை
கொண்டுமொழிந்து கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலு சுவாசமுநின்று -
நெஞ்சுதடுமாறி வருநேரமே. 18

பொழிப்புரை : "கடமையான முறைமைகளைப் பற்றிப் பேசுங்கள்" எனக் கூறி வந்த நாவு பேசமுடியாது வலிமை குன்றவே, தனது கரங்களால் சைகை செய்து சுட்டிக்காட்டிப் பேசியும், அன்னஞ் செல்லாமையால் விட்டுவரும் கஞ்சியினங்கள் செல்லுதலின்றி கடைவாய் வடிவழிந்து கொண்டும், பிராணவாயுவும் பூதநாடியும் விரைந்து பேசவும், சுவாசபந்தமுற்று மனம் கலங்குறும்போது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புரை : கடன்முறை - கடன் முதலாயுள்ள காரியாதிகள் எனினும் ஒவ்வும். மேல் பித்தம் ஓங்கிவர வேண்டிய நிலைமை.

வளர்பிறைபோல எயிறும்உரோம மும்சடையும்சிறு
குஞ்சியும்விஞ்ச, மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள் வந்து - 19

பொழிப்புரை : வளர்பிறைச் சந்திரனை ஒத்து விளங்கும் தந்தபந்திகளையும், சுருண்ட செம்பட்டை மயிரும் ஜடைகளும், தடிப்பான மனமும், கருமை மேனியும் பொருந்தி மலை இலக்காக யமபடர்கள் தற்சூழவும்,

குறிப்புரை : விஞ்சுமனம் - என்றது, கல்நெஞ்சு என்க. (பிராணன் உச்சுவாச சந்தர்ப்பம்.)

வலைகொடுவீசி உயிர்கொடுபோக மைந்தரும்வந்து
குனிந்தழநொந்து, மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேஇவர் காலமறிந்து - 20

பொழிப்புரை : பாசக்கயிறு கொண்டு வீசிக்கட்டி பிராணனைக் கைக்கொண்டு போகும்போது மக்கள் வந்து தக்கங்கொண்டாடவம், மனையாள்வந்து இவர்மடியில் விழுந்தழுதலும், ஐயோ ஐயன் சென்றனரே! எனக் காலத்தை உத்தேசித்து கனிந்தழவும்.

குறிப்புரை : மாழ்கினர் - இறந்தனர். காலமறிந்து - நிலமைக்குத் தக்கவாறாக.

பழையவர்காணும் எனுமயலார்கள் பஞ்சுபறந்திட
நின்றவர்பந்தர் இடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும்என்று - 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்புரை : "பழையகாலத்து மனிதனாச்சுதே" என்று பேசிக் கொண்டே அண்டை அயலார்களெல்லாம் விரைவாகவந்து ஆங்குள்ளாரில் சிலரைக் குறித்துப் "பந்தல் முதலான பாரியாதிகளைக் கவனியுங்கள்" என்ன, பஞ்சமன் தப்பு மேளம் தட்ட, சவஞ்சுடுதற்கு ஆக வேண்டியன அமைக்க எனச் சொல்லி,

குறிப்புரை : பறக்கும் பஞ்சென வேகமாயோடி - என்பதற்கு - "பஞ்சுபறந்திட" என்றனர். பந்தரிடல் என்றது, அக்காலத்தில் அம்மனைவாயிலில் பந்தரிடுதல் வளமை யென்பது விளங்கிற்று. ஆனால், அம்முறை இக்காலத்திலும் நாடுகளில் (கிராமப்புறத்து) நடக்கின்றன.

பலரையும்ஏவி முதியவர்தாம் இருந்தசவங்கழு
வும்சிலரென்று, பணிதுகில்தொங்கல் களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்பை - 22

பொழிப்புரை : (இவ்வாறு) பலரைக்குறித்து அனுப்பி, பெரியோர்கள் "பிணத்தினுக்கு எண்ணெய்க்காப்புச் செய்து தண்ணீர் விட்டுக் கழுவுங்கள்" என்று தூண்டி, பொன்னாபரணம், புதுவத்திரம், புஷ்பமாலை, நறுமணப்பொடி இவைகளையெல்லாம் பூட்டித் தங்கள் விசுவாசமறிவித்து, நாறும்படியான சரீரத்தை,

வரிசைகெடாம லெடுமெனஓடி வந்திளமைந்தர்கு
னிந்துசுமந்து கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வுஎ(ன்)ன வாழ்வெனநொந்து - 23

பொழிப்புரை : "முறைப்படி" எடுங்கள் என முதியோர் கூற, திடசரீரிகளாக நால்வர் வந்தெடுத்துத் தோளில் சுமந்து துரிதமாய் நடந்து சுடலைசேர்ந்து, "இம்மட்டுதான் மனிதன் வாழ்க்கை, இவ்வளவுதான் மனுஷாள்வாழ்வு" என்று வைராக்கிய வார்த்தைகளைக் கிளப்பித் துக்கித்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புரை : வரிசைகெடாமல் - தூக்க வெண்டிய முறையுடையவர்களைக் குறித்தது. மானிட வாழ்வுள(ன்)ன வாழ்வென நொந்து - என்ன வாழ்வு! என்ன வாழ்வு! என்றது வாழ்வின் கேவலத்தைக் காட்டும் இழிபுரையாம்.

விறகிடமூடி அழல்கொடுபோட வெந்துவிழுந்துமு
றிந்துபிணங்கள் உருகியெ லும்பு கருகியடங்கி
ஓர்பிடிநீறுமி லாதவுடம்பை
நம்பும்அடியேனை யினியாளுமே. 24

பொழிப்புரை : விறகு, வறட்டி கொண்டு சிதையடுக்கி, மேலே பிணத்தைக் கிடத்தி மேல் மூடித் தீ வைத்து மூட்டவே பிணம் வெந்திடும்போது தசை, கொழுப்பு முதலியன வெந்தும் வேகாததுமாய்ச் சரிந்திட மீண்டெடுத்திட்டும், என்புகள் கருக்கிப் பின் நீறாய்ச் சர்வமும் எரிந்து தணிந்தபின் ஓர் கைப்பிடி சாம்பலுக்குள் அடங்கிய இச்சரீரத்தையே பெருமைவாய்ந்த பெரும்பொருளாக எண்ணியிறுமாந்த அடிமையை இனியேனும் ஆட்கொண்டருள்க எந்தையே.

குறிப்புரை : இதனால், மனிததேக யோக்கியதை நன்கு பலனாகியது, இங்ஙனமழிந்தொழியும் இழிவுள்ள சரீரத்தையே சதா போஷித்து வந்து சிவபெருமானை ஓர் பொழுது ஓர் கணமும் தியானயாதொழிந்து நாளை அவமாய்க்கழித்தல் நல்லறிவின்மையால் என்க.

"தாயிடத்தில் மட்டும் பூரண அன்பு, பூரணதியாகம், பூரணப்பொறுமை, பூரண மன்னிக்கும் சுபாபம், பூரணத் தூய்மை பூரணத்தன் நலமறுப்பு ஆகிய நற்பண்புகளைக் காணமுடிகின்றது"

- செந்தில் துறவி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவை வணங்காது உயர்வில்லையே

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
நேரில் நின்று பேசும் தெய்வம்
பெற்ற தாயன்றி வேறொன்று ஏது

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே

அபிராமி சிவகாமி கருமாயி மகமாயி
திருக்கோயில் தெய்வங்கள் நீதானம்மா
அன்னைக்கு அன்றாடம் அபிசேகம் அலங்காரம்
புரிகின்ற சிறு தொண்டன் நான்தானம்மா
பொருளோடு புகழ் வேண்டும் மகனல்ல தாயே உன்
அருள் வேண்டும் எனக்கென்றும் அது போதுமே
அடுத்திங்கு பிறப்பொன்று அமைந்தாலும் நான் உந்தன்
மகனாகப் பிறக்கின்ற வரம் வேண்டுமே
அதை நீயே தருவாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே

பசும் தங்கம் புது வெள்ளி மாணிக்கம் மணிவைரம்
அவை யாவும் ஒரு **தாய்க்கு ஈடாகுமா**
விலை மீது விலை வைத்துக் கேட்டாலும் கொடுத்தாலும்
கடை தன்னில் **தாயன்பு கிடைக்காதம்மா**
ஈரைந்து மாதங்கள் கருவோடு எனைத்தாங்கி
நீ பட்ட பெரும் பாடு அறிவேனம்மா
ஈரேழு ஜென்மங்கள் எடுத்தாலும் உழைத்தாலும்
உனக்கிங்கு நான் பட்ட கடன் தீருமா
உன்னாலே பிறந்தேனே

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
நேரில் நின்று பேசும் தெய்வம்
பெற்ற தாயன்றி வேறொன்று ஏது

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே.

"மாத்ரு தேவோ பவ" (தைத்திரீய உபநிடதம்)

பொருள் : மாதாவைத் தெய்வமாகப் போற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா எந்தன் கோயில்

அம்மன் கோயில் எல்லாமே
எந்தன் அம்மா உந்தன் கோயிலம்மா
உன் அன்புக்கெல்லை சொன்னாலே
அது எல்லை இல்லா வானம் அம்மா
நின்றாலும் எங்கு சென்றாலும்
எப்போதும் எது செய்தாலும்
எந்நாளும் உன் அன்பு வந்தென்னைக் காக்கும்

அம்மன் கோயில் எல்லாமே
எந்தன் அம்மா உந்தன் கோயிலம்மா

பாடங்கள் படித்தால் பாடத்தில் கவனம்
பாடிடும் வேளையில் பாடலில் கவனம்
பாவையை கண்டால் பருவத்தில் கவனம்
பார்க்கின்ற வேளையில் மகன் மணம் சிதறும்
அவன் மனமோ அது எங்கே சென்றாலும்
இவள் மனமோ அது பின்னாலே போகும்
என்றென்றும் அவள் எண்ணங்கள்
நலமாக நாம் வாழ நல்வாழ்த்து கூறும்

அம்மன் கோயில் எல்லாமே
எந்தன் அம்மா உந்தன் கோயிலம்மா
உன் அன்புக்கெல்லை சொன்னாலே
அது எல்லை இல்லா வானம் அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றாலும் எங்கு சென்றாலும்
எப்போதும் எது செய்தாலும்
எந்நாளும் உன் அன்பு வந்தென்னைக் காக்கும்

அம்மன் கோயில் எல்லாமே
எந்தன் அம்மா உந்தன் கோயிலம்மா

காமுகன் ஆனாலும் கல்நெஞ்சன் ஆனாலும்
கயவன் என்றே அவன் பெயரெடுத்தாலும்
பொய் சொல்லி பிழைக்கும் பிள்ளை என்றானாலும்
பூமியில் ஆயிரம் தவறு செய்தாலும்
தன்மகனோ அவன் யாரான போதும்
அவன் நலமே இந்த தாயுள்ளம் தேடும்
என்றென்றும் அவள் எண்ணங்கள்
நலமாக நாம் வாழ நல்வாழ்த்து கூறும்

அம்மன் கோயில் எல்லாமே
எந்தன் அம்மா உந்தன் கோயிலம்மா
உன் அன்புக்கெல்லை சொன்னாலே
அது எல்லை இல்லா வானம் அம்மா
நின்றாலும் எங்கு சென்றாலும்
எப்போதும் எது செய்தாலும்
எந்நாளும் உன் அன்பு வந்தென்னைக் காக்கும்

அம்மன் கோயில் எல்லாமே
எந்தன் அம்மா உந்தன் கோயிலம்மா
உன் அன்புக்கெல்லை சொன்னாலே
அது எல்லை இல்லா வானம் அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் இல்லாமல் நான் இல்லை

தாய் இல்லாமல் நான் இல்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கொரு தாய் இருக்கின்றாள்
என்றும் என்னை காக்கின்றாள்
தாய் இல்லாமல் நான் இல்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கொரு தாய் இருக்கின்றாள்
என்றும் என்னை காக்கின்றாள்
தாய் இல்லாமல் நான் இல்லை

ஜீவ நதியாய் வருவாள்
என் தாகம் தீர்த்து மகிழ்வாள்
ஜீவ நதியாய் வருவாள்
என் தாகம் தீர்த்து மகிழ்வாள்
தவறினை பொறுப்பாள்
தர்மத்தை வளர்ப்பாள்
தரணியிலே வளம் சேர்த்திடுவாள்
தாய் இல்லாமல் நான் இல்லை

தூய நிலமாய் கிடப்பாள்
தன் தோளில் என்னை சுமப்பாள்
தூய நிலமாய் கிடப்பாள்
தன் தோளில் என்னை சுமப்பாள்
தன்மையில்லாமல் நான் மிதித்தாலும்
தன்மையில்லாமல் நான் மிதித்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மையிலே மனம் கனிந்திடுவாள்
தாய் இல்லாமல் நான் இல்லை

மேக வீதியில் நடப்பாள்
உயிர் மூச்சினிலே கலந்திருப்பாள்
மேக வீதியில் நடப்பாள்
உயிர் மூச்சினிலே கலந்திருப்பாள்
மலை முடி தொடுவாள்
மலர் மணம் தருவாள்
மங்கல வாழ்வுக்கு துணை இருப்பாள்
மலை முடி தொடுவாள்
மலர் மணம் தருவாள்
மங்கல வாழ்வுக்கு துணை இருப்பாள்
தாய் இல்லாமல் நான் இல்லை

ஆதி அந்தமும் அவள் தான்
நம்மை ஆளும் நீதியும் அவள் தான்
ஆதி அந்தமும் அவள் தான்
நம்மை ஆளும் நீதியும் அவள் தான்
அகந்தையை அழிப்பாள் ஆற்றலை கொடுப்பாள்
அவள் தான் அன்னை மகாசக்தி
அகந்தையை அழிப்பாள் ஆற்றலை கொடுப்பாள்
அவள் தான் அன்னை மகாசக்தி

அந்த தாய் இல்லாமல் நான் இல்லை
தானே எவரும் பிறந்ததில்லை
எனக்கொரு தாய் இருக்கின்றாள்
என்றும் என்னை காக்கின்றாள்
தாய் இல்லாமல் நான் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரும் நீயே உடலும் நீயே தாயே

உயிரும் நீயே உடலும் நீயே
உறவும் நீயே தாயே.........
உயிரும் நீயே உடலும் நீயே
உறவும் நீயே தாயே

தன் உடலில் சுமந்து
உயிரை பகிர்ந்து
உருவம் தருவாய் நீயே

உன் கண்ணில் வழியும்
ஒரு துளி போதும்
கடலும் மூழ்கும் தாயே.....

உன் காலடி மட்டும் தருவாய் தாயே
சொர்க்கம் என்பது பொய்யே.........

விண்ணை படைத்தான்
மண்ணை படைத்தான்

பூமிக்கு அதனால்
நிம்மதி இல்லை
பூமிக்கு அதனால் நிம்மதி இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்வு தந்தாயே தாயே

நானாக நானில்லை தாயே
நல்வாழ்வு தந்தாயே நீயே
நானாக நானில்லை தாயே
நல்வாழ்வு தந்தாயே நீயே

பாசம் ஒரு நேசம்
பாசம் ஒரு நேசம்
கண்ணார கண்டான் உன் சேயே

நானாக நானில்லை தாயே
நல்வாழ்வு தந்தாயே நீயே

கீழ்வானிலே ஒளி வந்தது
கூண்டை விட்டு கிளி வந்தது
நான் பார்க்கும் ஆகாயம்
எங்கும் நீ பாடும் பூபாளம்
நான் பார்க்கும் ஆகாயம்
எங்கும் நீ பாடும் பூபாளம்
வாடும் பயிர் வாழ
நீ தானே நீர் வார்த்த கார்மேகம்

நானாக நானில்லை தாயே
நல்வாழ்வு தந்தாயே நீயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம் ஒரு நேசம்
பாசம் ஒரு நேசம்
கண்ணார கண்டான் உன் சேயே

நானாக நானில்லை தாயே
நல்வாழ்வு தந்தாயே நீயே

மணிமாளிகை மாடங்களும்
மலர் சூடிய மஞ்சங்களும்
தாய் வீடு போல் இல்லை
அங்கு தாலாட்ட ஆளில்லை
தாய் வீடு போல் இல்லை
அங்கு தாலாட்ட ஆளில்லை
கோவில் தொழும் தெய்வம் இங்கு
நீயின்றி நான் காண வேறில்லை

நானாக நானில்லை தாயே
நல்வாழ்வு தந்தாயே நீயே

பாசம் ஒரு நேசம்
பாசம் ஒரு நேசம்
கண்ணார கண்டான் உன் சேயே

நானாக நானில்லை தாயே
நல்வாழ்வு தந்தாயே நீயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையைப் போலொரு தெய்வமில்லை

பத்து மாதம் சுமந்திருந்து பெற்றாள்
பகலிரவாய் விழித்திருந்து வளர்த்தாள்
வித்தகனாய் கல்விபெற வைத்தாள்
மேதினியில் நாம் வாழச் செய்தாள்

அன்னையைப் போலொரு தெய்வமில்லை - அவள்
அடிதொழ மறப்பவர் மனிதரில்லை - மண்ணில் மனிதரில்லை

துன்பமும் தொல்லையும் ஏற்றுக் கொண்டே - நம்மை
சுகம் பெற வைத்திடும் கருணை வெள்ளம்

நாளெல்லாம் பட்டினியாய் இருந்திடுவாள் - ஒரு
நாழிகை நம் பசி பொறுக்க மாட்டாள்
மேலெல்லாம் இளைத்திட பாடுபட்டே
மேன்மையாய் நாம் வாழச் செய்திடுவாள்.

அன்னையைப் போலொரு தெய்வமில்லை - அவள்
அடிதொழ மறப்பவர் மனிதரில்லை - மண்ணில் மனிதரில்லை

"வந்தே மாதரம்"

பொருள் : தாயை வணங்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை ஓர் ஆலயம்

அம்மா....
நீ சுமந்த பிள்ளை
சிறகொடிந்த கிள்ளை
என் கண்களும் என் நெஞ்சமும்
கொண்டாடும் தெய்வம்
தாயே
அன்னை ஓர் ஆலயம்
அம்மா...
நீ சுமந்த பிள்ளை
சிறகொடிந்த கிள்ளை

மண்ணில் என்ன தோன்றகூடும்
மழை இல்லாத போது
மனிதனோ மிருகமோ
தாயிலாமல் ஏது
மண்ணில் என்ன தோன்றகூடும்
மழை இல்லாத போது
மனிதனோ மிருகமோ
தாயிலாமல் ஏது
அன்னை சொன்ன வார்த்தை என்
நினைவில் வந்தது
அன்பு என்ற சொல்லே தாயின்
வழியில் வந்தது
எங்கே எங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா....
நீ சுமந்த பிள்ளை
சிறகொடிந்த கிள்ளை

வாழவைத்த தெய்வம் இன்று
வானம் சென்றது ஏனோ
உலகிலே உன் மகன்
நீர் இல்லாத மீனோ
வாழவைத்த தெய்வம் இன்று
வானம் சென்றது ஏனோ
உலகிலே உன் மகன்
நீர் இல்லாத மீனோ
மீண்டும் இந்த மண்ணில் வந்து
தோன்ற வேண்டுமே
வாழ்க வாழ்க மகனே என்று
வாழ்த்த வேண்டுமே
எங்கே எங்கே
அம்மா...
நீ சுமந்த பிள்ளை
சிறகொடிந்த கிள்ளை

என் கண்களும் என் நெஞ்சமும்
கொண்டாடும் தெய்வம்
தாயே
அன்னை ஓர் ஆலயம்
அன்னை ஓர் ஆலயம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறதுன்னா தாய்டா...

ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா வாங்கலாம்
அம்மாவை வாங்க முடியுமா நீயும்?
அம்மாவை வாங்க முடியுமா நீயும்?
ஆயிரம் உறவு வந்து உன்னை தேடி வந்து நின்னாலும்
தாய் போல தாங்க முடியுமா?
உன்னையும் என்னையும் படைச்சது இங்கே யாருடா?
தெய்வம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறதுன்னா தாய்டா..
(ஆசைப்பட்ட.)

பட்டினியா கிடைந்தாலும் பிள்ளைக்கு பால் கொடுப்பா
பால் குடிக்கும் பிள்ளை முகம் பார்த்து பசி தீர்ப்பா
இளவட்டம் ஆட பின்னும் எண்ணை தேச்சி குளிக்க வைப்பா
உச்சி முதல் பாதம் வரை உச்சி கோதி மகிழ்ந்திடுவா
நெஞ்சிலே நடக்க வைப்பா
நிலாவை பிடிக்க வைப்பா
பிஞ்சி விரல் நகம் கடிப்பா
பிள்ளை எச்சில் சோறு தின்பா
பல்லு முளைக்க நில்லு முனையால்
மெல்ல மெல்லதான் கீறி விடுவா
பல்லு முளைக்க நில்லு முனையால்
மெல்ல மெல்லதான் கீறி விடுவா
உன்னையும் என்னையும் படைச்சது இங்கே யாருடா?
தெய்வம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிறதுன்னா தாய்டா..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் ஒரு செடி முளைச்சா
மண்ணுக்கு அது பிரசவம்தான்
உன்னை பெற துடி துடிச்சா
அன்னைக்கு பூகம்பம்தான்
சூரியனை சுற்றிக்கிட்டு தன்னை சுற்றும் பூமியம்மா
பெத்தெடுத்த பிள்ளை சுத்தி பித்து கொள்ளும் தாய்மையம்மா
கர்பத்தில் நெளிந்த உன்னை நுட்பமாய் தொட்டு ரசிப்பா
பெத்தை போல் அவள் இருப்பா மெத்தையாய் உன்னை வளர்ப்பா
என்ன வேண்டும் இனி உனக்கு?
அன்னை மடியில் சொர்க்கம் இருக்கு
என்ன வேண்டும் இனி உனக்கு?
அன்னை மடியில் சொர்க்கம் இருக்கு...

"தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை,
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடும் கோயில் நீதானே அம்மா

நூறு சாமிகள் இருந்தாலும்
அம்மா உன்னைப்போல் ஆகிடுமா
கோடி கோடியாய் கொடுத்தாலும்
நீ தந்த அன்பு கிடைத்திடுமா
ரத்தத்தை நான்
தந்தாலுமே உன் தியாகத்துக்கு ஈடாகுமா
நான் பட்டக் கடன்
தீர்ப்பேன் என்றால் ஓர் ஜென்மம் போதாதம்மா
நடமாடும் கோயில் நீதானே
நூறு சாமிகள்
இருந்தாலும்
அம்மா உன்னைப்போல் ஆகிடுமா
கோடி கோடியாய் கொடுத்தாலும்
நீ தந்த அன்பு கிடைத்திடுமா
மழை வெயில் பார்க்காமல்
பார்ப்பாள் வேலை
குழந்தைகள்தான் அவள்
கழுத்துக்கு மாலை
மழை வெயில் பார்க்காமல்
பார்ப்பாள் வேலை
குழந்தைகள்தான் அவள்
கழுத்துக்கு மாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெழுகாக உருகி

தருவாளே ஒளியை

குழந்தைகள் சிரிப்பில்

மறப்பாளே வலியை

நடமாடும் கோயில் நீதானே

நூறு சாமிகள்

இருந்தாலும்

அம்மா உன்னைப்போல் ஆகிடுமா

கோடி கோடியாய் கொடுத்தாலும்

நீ தந்த அன்பு கிடைத்திடுமா

ரத்தத்தை நான்

தந்தாலுமே உன் தியாகத்துக்கு ஈடாகுமா

நான் பட்டக் கடன்

தீர்ப்பேன் என்றால் ஓர் ஜென்மம்போதாதம்மா

நடமாடும் கோயில் நீதானே

சான்றோன் எனக் கேட்ட தாய்

"ஈன்ற பொழுதிற் பெரிது உவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

- திருக்குறள்

பொருள் : தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய், தான் அவனைப் பெற்றெடுத்த பொழுதைவிடப் பெரிதும் மகிழ்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print@Mickey-Chava
021-2-27-17-07